


# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்



1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் - 11, இதழ் - 6 நவம்பர் - டிசம்பர் 2025

R4871

## HOW TO LOCATE OUR SELVES
## நம்மை எப்படி கண்டுபிடிப்பது

தெய்வீக திட்டத்திற்கு மற்றவர்களது உறவை நம்மால் கண்டு பிடிக்க இயலாதிருந்தாலும் நாம் எங்கே இருக்கிறோம் என்பதைக் காண இயலாதா? அப்படியானால் எப்படி? தேவ கிருபையால் நாம் எங்கே இருக்கிறோம் என்பதை கண்டுபிடிக்க முடியும். நாம் எடுக்க வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளையும் திரும்ப வேண்டிய திருப்பங்களையும் நாம் அறிந்தோமானால் இவைகளில் எத்தனை முன்னேற்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதை அறிந்தால் நாம் எங்கே இருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். தேவன் தமது குமாரனின் உடன் சுதந்தரத்துவத்துக்கு அழைக்கப்பட்ட நீதியான மனுஷனுக்கு கீழ்க்கண்ட குறிப்புகள் நமக்கு உதவிகரமாக இருக்கும் :-

(1) நீதி, சத்தியம், பரிசுத்தம் ஆகியவற்றுக்காக ஏங்குதல் நமது விழுந்து போன சுபாவத்தின் திசையில் கர்த்தரிடமிருந்து ஒரு ஈர்ப்பைக் குறிக்கிறது. இந்த இழுத்தலுக்கான நமது முதல் பதில் நீதியையும் சாந்தத்தையும் நாடுதல் ஆகும். அப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தர் கூறுவதாவது: "என்னிடத்தில் சேருங்கள், அப்பொழுது நான் உங்களிடத்தில் சேருவேன்." மனப்பூர்வமாய் செய்கிற பாவத்திலிருந்து மனந்திரும்பும் முதல் படிக்கு பிறகு இன்னும் ஏராளமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு படியும் கர்த்தருக்கும் நீதிக்கும் அருகே கொண்டு வரும். "நமது மாம்சத்தில் பரிபூரணம் வாசமாயிருப்பதில்லை" என்பதையும் தெய்வீக பிரமாணத்தில் நமது சொந்த மதிப்பீடு மற்றும் விளக்கத்திற்கு இசைவாக நம்மால் ஜீவிக்க இயலாது என்பதையும் பரத்திலிருந்து கிருபையும் உதவியும் தேவை என்பதையும் அது இன்னும் தெளிவாக காண்பிக்க வேண்டும். இந்த முழு மார்க்கமும் நீதிக்குரிய ஒன்றாக இருக்கிறது. அதாவது தேவன் மற்றும் அவரது நீதியின் தேவைகளுக்கு இசைவாக இருக்க முனைகிறது.

இப்படியாக அந்த இடத்தை அடைந்திருக்கிற ஆத்துமாவானது தேவனிடத்தில் கூக்குரல் இடுகிறது. இந்த சமயத்தில் அது ஒரு இரட்சகர் தேவை என்பதையும் இயேசு தான் இரட்சகர் என்பதையும் தெளிவாக காண்கிறது; "என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்ற செய்தியை கேட்கிறது. அது "ஆண்டவரே, உம் மூலமாக சந்தோஷத்துடன் பிதாவினிடத்தில் செல்வேன்" என்று பதிலளிக்கிறது.

(2) சீஷத்துவத்திற்கான நிபந்தனைகள் என்ன என்பதற்கும் தேவனிடத்தில் சென்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆசீர்வாதத்தை கொண்டு வருவதற்கான அடுத்தபடி என்ன என்பதற்கான பதிலை இயேசு கூறுவதாவது: "ஒருவன் எனக்கு சீஷனாக இருக்க விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன்." ஆண்டவர் தீர்மானத்தை விரைவுப்படுத்தச் சொல்லவில்லை. விரைவுப்படுத்துதல் சீஷனிடம் விடப்பட்டிருக்கிறது. நீதியின் மேலுள்ள அவனது அன்பும் தேவனிடத்தில் அவனது ஐக்கியத்திற்கான விருப்பமும் சீஷத்துவத்திற்கான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுவதற்காக அவனது துரிதத்தின் மூலம் அளவிடப்படும். அனைவருக்கும் ஆண்டவர் கூறுவதாவது: "உட்கார்ந்து செல்லும் செலவை கணக்குப் பார்க்கக்கடவன்." கலப்பையில் உன் கையை வைத்துவிட்டு பின் வாங்கிப் போகக்கூடாது. கணக்கு பார்க்க வருடக்கணக்கில் எடுத்துக்கொண்டால் அவர்கள் பரிசை பெறுவது அபூர்வம் என்று நாங்கள் நிச்சயமாக உணருகிறோம். இந்த முடிவை சீர்தூக்கி பார்ப்பது சரியான வழி. பூமிக்குரிய நம்பிக்கைகள், நோக்கங்கள், வளங்கள், சந்தோஷங்கள் ஆகியவைகளை ஜீவ பலிகளாக பிதாவானவர் கைகளில் ஒப்புகொடுத்து பாடுகள், சோதனைகள், பரீட்சைகள் ஆகியவைகளில் தற்கால வாழ்க்கையில் உண்மையுள்ளவர்கள் என்பதை நிரூபித்தால் கனம், மகிமை, சாகாமையை பரலோக தளத்தில் பெறுவோம். கர்த்தருக்கான ஊழியம் விரும்பத்தக்க ஒன்று என்பதையும் அதற்கான விலைக்கிரயம் சிறியவர்களாகிய நம் அனைவருக்கும் முக்கியமற்றது என்பதையும் உணருவதற்கு விசுவாசமுள்ள இருதயமுடைய முதிர்ச்சியுடைய நபருக்கு அதிக காலம் தேவைப்படாது. வைராக்கியமும் விசுவாசமும் உடையவர்கள் துரிதமாக கூறுவதாவது: "இதோ, கர்த்தாவே, நான் என்னையே கொடுக்கிறேன்; என்னால் செய்ய முடிந்த அனைத்தும் இதுதான்."

பிறகு இரட்சகரின் பங்கு வருகிறது. பிதாவினிடத்திற்கு இணக்கமாக ஆண்டவரின் மூலம் பிதாவினிடத்தில் வந்திருக்கிற அனைவருக்கும் அவர் நமது பரிகாரியாக நிற்கிறார். பரலோக நீதிமன்றத்தில் அவர்களது பிரதிநிதியாக அவர்களுக்காக பரிந்து பேசுகிறார். அவர்களது அர்ப்பணத்தை ஏற்றுக்கொண்டு அவர்களை அங்கீகரித்து, தமது பலியின் புண்ணியத்தை அவர்களுக்கு சாட்டுதல் பண்ணி அவர்களது குறைவுகளை சரி பண்ணுகிறார். அவர் மூலம் அவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படுகிறார்கள். இப்படியாக பரிகாரியானவர் நமது கறைகளை மூடி, நமது நாமத்தை பிதாவிடம் அறிமுகம் செய்து நமது பலிகள் பிதாவினால் ஏற்றுக்கொள்ளும்படி செய்கிறார். கடைசி அங்கம் ஏற்றுக்கொள்ளப்படும் வரை, பரம அழைப்பின் கதவு அடைக்கப்படும் வரை, கடைசியான புத்தியுள்ள கன்னிகை திரைக்குப் பின்னால் நுழையும் வரை பரிகாரியானவர் செய்வதை நாம் காண்கிறோம்.

பிதாவானவர் நம்மை ஏற்றுக்கொண்டது, நமது புத்திர சுவீகாரம், பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பித்தல் மற்றும் முத்திரையிடுதலின் ஆரம்பம் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது. முத்திரையிடுதல் என்பது புது சிருஷ்டியாக, தெய்வீக சாயலுக்கு அல்லது ஆவிக்குரிய சாயலுக்கு நம்மை ஈர்த்தல் ஆகும். இந்த இரண்டு படிகளையும் நாம் எடுத்திருக்கிறோமா இல்லையா என்பதை நாம் அனைவரும் அறிய வேண்டும். நாம் செய்யவில்லையென்றால் மேலும் பார்ப்பதில் பிரயோஜனமில்லை.

### நாம் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான ஆதாரம்

(3) ஆதி சபையில் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டது சில அற்புதமான வரங்களினால் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் இது சபையை ஸ்தாபிப்பதற்காக விசேஷமாக கொடுக்கப்பட்டது. அந்த வரங்கள் ஒழிந்து போகும் என்று அப்போஸ்தலர் பவுல் குறிப்பிட்டார். (1 கொரிந்தியர் 13:8) "அவைகள் அப்போஸ்தலர் கைகளை வைத்ததினால் கொடுக்கப்பட்டன." (அப்போஸ்தலர் 8:18) அப்போஸ்தலர்கள் மரித்த பிறகு இந்த வரங்கள் யாருக்கும் கொடுக்கப்பட-வில்லை. இந்த வரங்களை பெற்றவர்கள் மரித்த பிறகு வரங்கள் நின்று போயின. இப்படியாக ஒழிந்து போயின. ஆனால் வரத்திற்கு பதிலாக ஆவியின் கனிகள், கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கும் திராட்சை செடியில் ஒரு கிளையாக, அங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கும் ஆதாரமாக வந்தன. ஆரம்பத்தில் கனியின் மொட்டுகள் சிறியதாக இருக்கின்றன. அவைகளுக்கு தோட்டக்காரரின் கவனிப்பு தேவைப்படுகிறது. அவர் நம்மை கிளைக் கழிக்கிறார். நம்மை ஒட்டிக்கொள்ளும் தன்மை கொண்ட பூமிக்குரிய காரியங்களை நம்மை விட்டு நீக்குகிறார். வேருக்கும் திராட்சை செடிக்கும் நேரடியாக தொடர்புடையவைகளைத் தவிர மற்ற பூமிக்குரிய ஆதரவுகளை நம்மை விட்டு நீக்குகிறார். மரணம் வரையிலான நமது அர்ப்பணிப்புக்கு இசைவாக நமது பூமிக்குரிய இலட்சியம் இப்படியாக துண்டிக்கப்பட்டு கர்த்தருடைய ஆவி அதிகமதிகமாக நமக்குள் வந்து ஆவியின் கனிகளை உற்பத்தி பண்ணுகிறது. திராட்சையின் சாரங்கள், கிளைகள் மற்றும் அதின் இலைகளுக்கும் செல்லுகிறது. இப்படிப்பட்ட கிளைக் கழித்தல் திராட்சை செடியில் நாம் அங்கமாயிருப்பதற்கும் கிறிஸ்துவின் பாடுகளில் நமது ஐக்கியத்திற்கும் ஆதாரம். ஏனெனில் பரலோக தோட்டக்காரர் இப்படியாக மெய்யான திராட்சை செடியின் மெய்யான கொடிகள் அனைத்தையும் கவனிக்கிறார். கனிகளையும் கிருபைகளையும் நாம் காண ஆரம்பிக்க வேண்டும். கர்த்தர், சகோதரர்கள் மற்றும் சகல மனுக்குலத்திடம் நாம் தொடர்பு கொள்ளும் அளவுக்கு தக்கதாக நமது சக்தி வெளிப்படுத்தப்பட வேண்டும்.

தெய்வீக கிருபைக்கான மற்ற அறிகுறிகள் கர்த்தருடன் ஜெபத்திலும் அவருடைய வார்த்தையின் மூலமாயும் அந்நியோந்நியத்தில் இருப்பதாகும். தெய்வீக திட்டத்தின் மேல் உள்ள அன்பு, நீதி, நியாயம், சத்தியம் மற்றும் மேன்மையானவைகளை நமக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கு தக்கதாக விருத்தி செய்வதற்கான ஒரு விருப்பம். நமது விசுவாசத்திற்கான இன்னொரு ஆதாரம் கர்த்தரினிமித்தமும் சத்தியத்தினிமித்தமும் நிந்தைகள் மற்றும் துன்புறுத்தல்களை அனுபவிப்பதற்காக நாம் பாத்திரராக கருதப்படுதல் ஆகும். அதாவது தெய்வீக கிருபையினால் நாம் ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகும்.

கர்த்தருடைய வார்த்தையை உயர்வாக மதித்தலில் அபிவிருத்தி, விலையேறப்பெற்ற போதனைகளில் நுண்ணறிவு மற்றும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் அதிகமான சந்தோஷம் ஆகியவை நாம் கர்த்தருடன் இணக்கத்தில் இருப்பதற்கான அறிகுறிகள். ஊழியம் செய்வது பெருமைக்காகவோ மற்றவர்கள் நம்மைப் பற்றி ஏதாவது நினைப்பார்களோ என்பதற்காகவோ இல்லாமல் கர்த்தருடைய மகிமைக்காகவும் மற்றும் அவரது சித்தத்தை அறிய விரும்புகிறவர்களின் நன்மைக்காகவும் ஆகும்.

### பின்வாங்கிப் போவதற்கான ஆதாரங்கள்

சிலர் இந்த ஆசீர்வாதம், சலுகையின் ஆழம், உயரம், நீளம் மற்றும் அகலத்தை அடைவதில் தோல்வியடையலாம். அவர்கள் கர்த்தருடைய சத்தியம் மற்றும் கிருபையில் கொஞ்சத்திலும் சகோதரருடனான அந்நியோந்நியம் கொஞ்சத்திலும், உலக காரியங்களில் அதிகமாகவும் திருப்தியடைகிறார்கள். இவர்கள் தங்கள் உடன்படிக்கையையும் வைராக்கியமான பலியின் கடமைகளையும் செயல்படுத்த தவறுகிறார்கள். அவர்கள் நல்லவர்களாகவும், மதிப்பிற்குரியவர்களாகவும் தயையுள்ளவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு மாறாக எதையும் செய்யாமல் உண்மையுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் விசுவாசத்தின் உச்சத்தை அடைவதில் அறிவதிலும் செயல்படுவதிலும் தோல்வியடைகிறார்கள். இவர்கள் மணவாட்டி வகுப்பிலும் "திரள் கூட்ட" வகுப்பிலும் சேர்வதற்கு அபாத்திரராகக் கூடிய அபாயத்தில் இருக்கிறார்கள். இந்த கனத்தையும் நிலைமையையும் அடையக்கூட சோதனைகள், பாடுகள் மற்றும் துன்பங்களையும் சரீரத்தின் அழிவையும் அடைய வேண்டிய அவசியம் இருக்கும். ஆனால் அவர்கள் பெரிய பரிசை பெறமாட்டார்கள். ஏனெனில் வைராக்கியத்துடன் ஓடக்கூடிய பந்தயத்தில் தோல்வி அடைந்தார்கள். சிலர் மகிமையான சலுகைகளாகிய அர்ப்பணிப்பு, ஊழியம், அறிவு முதலானவைகளை அடைந்திருந்தும், பிறகு குளிரடைந்து, அக்கறையின்மைக்கு சென்று உலக வாழ்வின் காரியங்களில் ஈடுபட்டு, குறைவான உலக கனிகளைத் தந்து, மணவாட்டி வகுப்புக்கு தகுதியற்றவர்களாவார்கள். எனினும் கர்த்தர் அவர்களோடு செயலாற்றி, அவர்கள் உண்மையிலேயே அவருடையவர்களாக இருந்தால், முடிந்தால் அவர்களை சிட்சித்து திரள்கூட்ட வகுப்புக்கு தயார்படுத்தலாம். மகா உபத்திரவத்தில் அவர்களை போடுவது அவசியமாக இருக்கலாம்.

"சிறுமந்தைக்கு" தகுதியற்றவர்களாகி அதை இழக்கிற ஆபத்திற்கான ஆதாரங்கள்: உலக ஆவி, பொறுப்பற்ற ஆவி, உலக சிநேகம், தேவன் மற்றும் நீதிக்கான வைராக்கியத்தில் தொய்வு, சந்தர்ப்பங்களை பயன்படுத்துவதில் தோல்வி, "நம்மை அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவருடைய புண்ணியங்களை, அறிவிக்கும்படி" மற்றவர்களுக்காக நாடுவதில் தோல்வி, ஆவியின் கனிகளிலும் கிருபைகளிலும் பெரும் அபிவிருத்தி அடைவதில் தோல்வி முதலானவை. தேவன் மற்றும் அவரினிமித்தமும் மற்றும் சகோதரர்களுக்கான அன்பு மற்றும் வைராக்கியத்தை இழத்தல். நாம் முன்னரே

அறிந்திருந்து அங்கீகரித்த தெய்வீக திட்டம் மங்குவது அதிகரிக்கும். இந்த நிலைமையின் உச்சக்கட்டம் “புறம்பான இருள்.” அதாவது பொதுவாக உலக மனுக்குலத்தை உள்ளடக்கிய குருட்டுத்தன்மை, அது கர்த்தருடைய வார்த்தையினாலும் ஆவியினாலும் ஒளியை பெறாதிருக்கும்.

“மரணத்திற்கு ஏதுவான பாவத்தை” செய்தவர்கள் குறித்து: இவர்களைக் குறித்து விவாதிப்பது தேவையற்றது; ஏனெனில் இந்த நம்பிக்கையற்ற நிலைமையை அடைந்தவர்கள் தங்கள் நிலைமையை குறித்து அறிந்தவர்களாக இருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம். இரண்டாம் மரணத்தைப் பற்றிய பயம் இருந்து, நித்திய ஜீவன் மற்றும் தேவனுடனான நல்லிணக்கத்துக்கு விருப்பம் இருந்தால் நம்பிக்கை உண்டு. இரண்டு வகுப்பார்கள் “இரண்டு தரம் செத்து வேரற்றுப் போன மரங்கள்” (யூதா 12) என்று விவரிக்கப்படுகிறார்கள். அவர்களில் ஒரு வகுப்பார், புது சிருஷ்டியாக தேவனுடைய பரிசுத்தமானவைகளை பெற்று உலகத்திற்கும் அதன் சந்தோஷங்கள், அதன் நோக்கங்கள், அதன் விருப்பங்கள் மற்றும் அதன் பாவங்களுக்கும் திரும்பினவர்கள். இவர்கள் பலியின் உடன்படிக்கையை முழுமையாக நிராகரித்து, எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையற்ற நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் நிலைமையை உணராதிருக்கிறார்கள்; ஆனால் மரித்த உலக வாழ்க்கைக் குறித்து திருப்தியை உணருகிறார்கள். அவர்கள் உலகத்தாரைக் காட்டிலும், ஒரு காலத்தில் பாராட்டி, விட்டுவிட்ட சத்தியம் மற்றும் கிறிஸ்துவுக்கு எதிராக எரிச்சலும் கசப்பான உணர்வும் உடையவர்களாக இருக்கிறார்கள். இன்னொரு வகுப்பார் தப்பறையான போதகத்தினால் குற்றம் செய்தவர்கள். இவர்கள் இரட்சகரை விட்டுவிட்டு, அவரது பலியின் புண்ணியத்தையும் பலியின் மூலமாக நமக்களித்த சந்தர்ப்பங்களையும் இழக்கிறார்கள். இந்த சந்தர்ப்பங்கள் பலியின் வழியில் நமக்கு அந்த பலி நமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

நமது கர்த்தருடைய அறிக்கையை பற்றி நாம் கேட்கப்படுகிறோம். கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பது “சிறுமந்தையை” குறிக்கிறதா அல்லது “திரள் கூட்டத்தையும்” உள்ளடக்கியதா என்று நாம் கேட்கப்படுகிறோம். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பது உண்மையுள்ளவர்களைக் குறிக்கிறது என்று நாம் பதிலளிக்கிறோம். ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் அனைவரும் உண்மையுள்ளவர்களாக இருக்கும் வரை அவர்கள் முற்றிலும் ஜெயம் கொண்டவர்கள். நமது கர்த்தரின் இந்த வார்த்தைகள் நமது காலத்திற்குரியதாக காணப்படவில்லை. போர்களும் குழப்பங்களும் நூற்றாண்டு காலங்களாக இருந்து வந்தது போல இதுவும் நூற்றாண்டு காலமாக இருந்து வந்திருக்கின்றன. இந்த தீர்க்கதரிசனத்தைக் குறித்த தியானத்திற்கு, வேதாகம விளக்கவுரை, தொகுதி IV இல் ஒரு முழு அத்தியாயம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்படி நமது வாசகர்களை கேட்டுக் கொள்கிறோம். தற்காலத்தில் அநேகரை வஞ்சித்திருக்கிற கள்ள கிறிஸ்துகளும் கள்ள போதகர்களும் மிகவும் பெரிய மற்றும் செழுமையான சபைப் பிரிவுகளில் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் தான் மெய்யான சபை, மெய்யான மேசியா, பரலோக பிதாவானவரின் வலது கையினால் நடப்பட்ட மெய்யான திராட்சை செடி என்றும் கூறி தங்களையும் இலட்சக்கணக்கான மற்றவர்களையும் வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். மாறாக, மெய்யான திராட்சை செடி இந்த பல்வேறு சபைப்பிரிவுகளில் இருக்கலாம். பூமிக்குரிய இந்த ஸ்தாபனங்கள் எல்லாம் “பூமியின் திராட்சை பழங்கள்” என்று வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவைகளெல்லாம் சீக்கிரத்தில் சேர்க்கப்பட்டு தேவனுடைய கோபாக்கினை என்னும் ஆலையிலே போடப்படும். (வெளிப்படுத்தல் 14:19) தேவனுடைய பரிசுத்தவான்கள் கடந்த நாட்களில் இந்த பெரிய ஸ்தாபனங்களில் அந்தி கிறிஸ்து ஸ்தாபனங்களில் வஞ்சிக்கும் ஸ்தாபனங்களில் கொஞ்ச காலமாவது தொடர்பு கொண்டிருப்பார்கள். ஆனால் “முற்றிலும் ஜெயங்கொண்டவர்கள்” இந்த ஸ்தாபனங்களை உண்மையான சபை என்று தவறாக நினைக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் சிக்கிக்கொள்ளாதபடி கர்த்தர் அவர்களை வழிநடத்துகிறார். (சங்கீதம் 25:9; 91:11,12)

**R4873**

## THE WISDOM FROM ABOVE
## பரத்திலிருந்து வரும் ஞானம்

“மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும் உன் சகோதரனுக்கு இடறுதல் உண்டாக்கினால் அவைகளில் ஒன்றையும் செய்யாதிருப்பதே நன்மை பயக்கும். ” ரோமர் 14:21

கடந்த காலங்களில் ராஜாக்களிடத்தில் காணப்பட்ட கொடூரத்தன்மையை நாம் கவனித்திருக்கிறோம். ஆகையால் நாம் அவர்களது பரந்த பெருந்தன்மையையும் ஞானத்தையும் கவனிப்பது பொருத்தமாக இருக்கும். இன்றைய பாடம் இதை விளக்குகிறது. எருசலேமின் அழிவுக்கு இருபது வருடங்களுக்கு முன்பு அங்கிருந்து நேபுகாத் நேச்சாரினால் அடிமையாக கொண்டு செல்லப்பட்ட மேலான பிறப்பும் பக்தி வைராக்கியமும் உடையவர்கள் நான்கு பேர் இருந்தனர். அவர்கள் தானியேல், அனனியா, மீஷாயேல் மற்றும் அசரியா ஆகும். இந்த கைதிகள் தவறாக நடத்தப்படவோ, அடிமைகளாக நடத்தப்படவோ இல்லை. அவர்களது புத்திக்கூர்மை அறியப்பட்டு, உயர்ந்த பள்ளியில் சேர்க்கப்பட்டு ராஜாவுக்கு ஆலோசனைக்காரராக ஆக்கும் பொருட்டு நன்கு போதிக்கப்பட்டார்கள். தற்காலத்தில் இவைகளெல்லாம் சொந்தங்களுக்கு உத்தியோகம் கொடுத்தல், அசட்டை பண்ணுதல், லஞ்சம் போன்றவைகள் மூலம் வந்தன. இது புரிந்து கொள்ள முடியாததாக இருக்கிறது.

அதே சமயம் இந்த காரியம் தேவ கிருபையில் நடைபெற்றது. தேவனுக்கு விரோதமாக கலகஞ்செய்தவர்கள் மட்டும் சிறைப்படுத்தப்பட்டு நாடு கடத்தப்படாமல் தெய்வீக பிரமாணத்தின் கொள்கைகளுக்கு மிகவும் விசுவாசமாக இருந்தவர்கள் கூட சிறைக்கைதியாக கொண்டு போகப்பட்டார்கள். வாழ்க்கையின் பேரழிவு காலத்திலும் தேவனிடம் உண்மையான விசுவாசம் உள்ளவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும் என்ற பாடத்தை நாம் இங்கே கற்றுக்கொள்கிறோம். தானியேலும் அவரது தோழர்களும் எதிரிகளின் தேசத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டு செழிப்பாக

இருந்தார்கள். தங்கள் சொந்த தேசத்தில் பெறும் பதவியைக் காட்டிலும் உயர்ந்த பதவியை பெற்றார்கள்.

**உணவுக் கட்டுப்பாட்டின் நன்மைகள்**

எபிரேய வாலிபர்கள் ராஜாவின் குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டு, அவர்களுக்கு ராஜ போஜனமும் உயர்ந்த மது வகைகளும் கொடுக்கப்பட்டன. மற்ற தேசங்களிலிருந்து வந்த அனைத்து மாணவர்களும் நன்கு போஷிக்கப்பட்டு சரீர பிரகாரமாகவும் மனதின் பிரகாரமாகவும் உயர்ந்த நிலையில் வைப்பது ராஜாவின் கொள்கையாக இருந்தது. உயர்ந்த வாழ்க்கை அறிவுத்திறனுக்கு சாதகமாக இருக்கும் என்பது தவறு என்று இந்த பாடம் நமக்கு காண்பிக்கிறது. ஆன்மீகத்தை குறிப்பிடவில்லை.

ஆரம்பத்திலிருந்தே தேவனுடைய பராமரிப்பின் கீழ் நாடு கடத்தப்பட்ட தானியேலுக்கு இந்த மாணவர்களின் பொறுப்பாளரிடம் (மந்திரி) விசேஷித்த அனுகூலம் கிடைத்தது. சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியே ஈர்க்கக்கூடியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஆவி சரியான மத பயிற்சியின் மூலமே வரும். இந்த மந்திரியிடம் தானியேலும் அவரது கூட்டாளிகளும் தங்களுக்கு ராஜ உணவு மற்றும் திராட்சை ரசத்திற்கு பதில் பருப்பு, மரக்கரி உணவும் தரும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அந்த மந்திரி, ராஜாவுக்கு தான் பயப்படுவதாகவும் மரக்கறி உணவினால் அவர்கள் முகம் வாடிப்போயிருக்க ராஜா கண்டால் தனது வேலைக்கோ உயிருக்கோ ஆபத்து வரும் என்றும் கூறினான். பத்து நாட்கள் இந்த மரக்கறி உணவு கொடுத்து சோதித்து பார்த்த பிறகு ஏற்றுக்கொள்ளும்படி எபிரேய வாலிபர்கள் கேட்டுக்கொண்டார்கள். பத்து நாட்களுக்கு பிறகு சோதித்து பார்த்த போது மற்றவர்களைக் காட்டிலும் இந்த நான்கு வாலிபர்களும் சரீர புஷ்டியும் முகக்களையும் உடையவர்களாக காணப்பட்டதால் அவர்களது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அவர்களைப் பற்றி நாம் வாசிக்கிறதாவது: “இந்த நான்கு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமார்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலை சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்.” குறித்த நாட்களின் முடிவில் ராஜா அவர்களோடே பேசினான். “அவர்கள் எல்லாருக்குள்ளும் தானியேல், அனனியா, மீஷாயேல், அசரியா என்பவர்களைப் போல வேறொருவரும் காணப்படவில்லை.... ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களை கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களை காட்டிலும் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.”

இந்த ஞானம் மற்றும் புத்தியின் ரகசியம் என்ன? இந்த ரகசியம் தேவனுடைய ஆசீர்வாதத்திலும், தெய்வீக சித்தத்தை செய்வதற்கு, நீதியை செய்வதற்கு தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்த வாலிபர்களின் நாட்டத்திலும் இல்லையா? இப்படியாக நாம் நமது இருதயம் மற்றும் சிந்தை சுயநல நோக்கத்திலிருந்தும் மூட நம்பிக்கையிலிருந்தும், பயத்திலிருந்தும் விலகியிருந்து, எப்படியாவது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சிந்தை, எந்த சமயத்திலும் அபூர்வமாகவே இருக்கும். இப்படிப்பட்ட சிந்தை ஞானத்தை எப்பொழுதும் அபிவிருத்தி செய்யும். மறுபுறம் உணர்ச்சி வசப்படுதல், சுயநலம் போன்றவை தீர்மானத்தை குழப்பும். நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நடக்கையிலும் நமக்கு தேவையானது முழு மனதுடையவர்களாகிய அர்ப்பணம் செய்த தானியேல் மற்றும் அவருடைய கூட்டாளிகளின் முத்திரையாகும். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு என்ன நடந்தாலும் சக மனிதர்களுக்கு சிறப்பான ஊழியம் செய்வார்கள். அந்தக் காலத்திலிருந்து உலகமானது ஞானத்தில் வளர்ந்திருக்கிறது. இந்த காலத்தில் ஒரு தானியேல் இப்படிப்பட்ட செல்வாக்குக்குள் சென்றிருக்க முடியாது. ஒருவேளை அவர் அங்கே இருந்தால் அவர் நீக்கப்படாமல் இருந்தது ஒரு அற்புதமாக இருந்திருக்கும். இப்படிப்பட்ட ஒரு அற்புதம் தான் கொரலாடோவின் நீதிபதி லிண்ட்சே, நீதியின் கொள்கைகளுக்கு உண்மையாக இருந்ததினிமித்தம் அவரை நசுக்குவதற்கான அடக்குமுறையான அரசியல் இருந்தும் கூட நீண்ட காலம் அவரது பணியில் நீடித்தது.

பாபிலோன் அழிந்து போனாலும் நம்மில் சிலர் தானியேலைப் போல இருக்கலாம் அல்லது உயர்ந்த ஸ்தானத்தையும் ஆச்சரியமான சந்தர்ப்பத்தையும் பெறலாம். தேவையானது என்னவென்றால் தானியேலின் ஆவியே ஆகும். ஒவ்வொரு மனிதனுக்கோ அல்லது ஸ்திரீக்கோ வாலிபரோ அல்லது பெரியவர்களோ சந்தர்ப்பத்தை பெறலாம். “தானியேலைப் போல தைரியமாக இருக்க வேண்டும்.” ஐயோ! மிகவும் சொற்பமானவர்களே சலுகையை உணருகிறார்கள். மிகவும் சிலரே தானியேல் ஆவியை பின்பற்றுகிறார்கள.

இந்த யுகம் முழுவதும் கிறிஸ்தவர்கள் தானியேலின் நிலைமையில் இருக்கிறார்கள். மகிமையின் மகாராஜா அவர்களை கிறிஸ்துவின் பள்ளியில் வைத்திருக்கிறார். மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது அதில் உடன் சுதந்தரராக இருக்கக்கூடிய சிலரை அவர் தெரிந்து கொள்ள விரும்புகிறார். அதற்கான பரீட்சை இந்த யுக முடிவில் வரும். அதில் பாத்திரராக காணப்படுகிறவர்கள் நீதியின் கொள்கைகளுக்கும் தேவனிடத்திலும் தானியேலின் பக்தியின் ஆவியை உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் சத்திய ஊழியத்தில் தங்களது ஜீவனைக் கொடுக்கிறவர்களாவும் இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்களாகவும் இருப்பார்கள். இவர்களைக் குறித்து கர்த்தர் கூறுகிறதாவது: “என் சம்பத்தை சேர்க்கும் நாளில் அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்.” (மல்கியா 3:17)

**“உன் சகோதரன் இடறுகிறதற்கு ஏதுவாயிருந்தால்”**

இந்த வசனம் உணவு மற்றும் பானத்தை பொறுத்த வரை சிறந்தது எது என்ற கருத்தை கொடுப்பதோடு, தேவனுக்கு சிறந்த முறையில் ஊழியம் பண்ணவும் பிறனுக்கு நம்மால் தொந்தரவு ஏற்படக்கூடாது என்பதை மனதில் வைக்கவும் நம்மை சாத்தியப்படுத்துகிறது. நமது குணலட்சணம் எந்த அளவுக்கு உயர்ந்ததாக இருக்கிறதோ அந்த அளவு இயற்கையாகவே பலவீனமாக இருப்பவர்கள் மேல் நமது செல்வாக்கும் அதிகமாக இருக்கும். அந்த செல்வாக்கு மற்றவர்களுக்கு எப்பொழுதும் நன்மையாக இருக்கும்படி, சிந்தை, வார்த்தை மற்றும் கிரியைகள் உயர்ந்த நிலைக்கு உயரும்படி பயன்படுத்தப்பட வேண்டும். இந்த திசையில் உதவுகிற அனைத்தும் கவனிக்கப்பட வேண்டும். அது தேவனிடமிருந்து வந்த கட்டளையாகவும் நமக்கு இருக்க வேண்டும். அவர் கூறியிருப்பதாவது: “நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்.”

R4873

# THE FIERY FURNACE
# எரிகிற அக்கினி சூளை

"கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான். " எபிரேயர் 13:6

நமது கடந்த பாடத்தில் பார்த்த நிகழ்வு நடந்து பல வருடங்கள் ஆயின. நேபுகாத் நேச்சார் ராஜா அந்த நான்கு எபிரேய கைதிகளை கனத்திற்கும் நம்பிக்கைக்கும் உரிய உயர்ந்த பதவியில் வைத்தான். தானியேல் எங்கே இருந்தார் என்பதை நாம் அறியோம். அவரது மற்ற மூன்று நண்பர்களுக்கும் புது பெயர்கள் கொடுக்கப்பட்டு பாபிலோனின் மாகாணங்களில் கவர்னராக இருந்தனர்.

நேபுகாத் நேச்சார் உலகத்தை ஜெயித்திருந்தான். உலகளாவிய அரசாங்கம் பூமியின் எல்லை பரியந்தம் போர் இல்லாமல் செய்யக்கூடும் என்ற கருத்தை கொண்ட முதலாவது இராஜாவாக நேபுகாத் நேச்சார் இருந்தான். அவன் உலகத்தை ஜெயித்து, தனக்கு ஞானம் மற்றும் நியாயத்துடன் கீழ்ப்படிதலுடன் இருந்தவர்களை நல்லபடியாக நடத்தி, மற்றவர்களை கொடூரமாக அழித்தான். அது அவனது வெல்ல முடியாத சக்தியை வெளிப்படுத்தும் ஒரு பாடமாக இருந்தது. அவனது ராஜ்யபாரம் பல்வேறு தெய்வங்களை வணங்குகிற பல்வேறு ஜாதிகளை உடையதாக இருந்தது. அவன் அனைத்தையும் ஒன்றுபடுத்த நினைத்தான். அவன் ஒரு மாபெரும் சமாதான விழாவை ஏற்படுத்தி, அவனது ஆளுகையிலிருந்த பல்வேறு தேசங்களின் பிரதிநிதிகளை கொண்டு வந்தான். சகல தேசங்களின் பிரதிநிதிகள் கூடினார்கள். அவர்கள் பாபிலோனின் மகத்துவத்தையும் மகிமையையும் வல்லமையையும் கண்டு அவர்களை எதிர்ப்பது பயனற்றது என்பதை உணர வேண்டும் என்று நினைத்தான். அவர்களுக்கு ஒரே அரசாங்கத்தை வைத்து உலகம் முழுவதும் சமாதானமாக இருக்க வேண்டும் என்ற காரியம் விளக்கப்பட்டது.

நேபுகாத் நேச்சாரின் இந்த திட்டம் நன்மையானதாகவும் ஞானமானதாகவும் காணப்பட்டது. அவன் வயதான இஸ்ரயேலரிலிருந்து அவர்கள் தேவன் கொடுத்திருந்த சில வாக்குத்தத்தங்களை அறிந்திருந்தான். அதாவது எதிர்காலத்தில் இஸ்ரேல் தேசம் வெற்றி கொள்ள முடியாத தேசமாகி சகல ஜாதிகள், கோத்திரங்கள், ஜனங்கள் மற்றும் பாஷைக்காரர்களை ஆளுகை செய்து ஆசீர்வதிக்கும் என்பதாகும். யூதர்களின் இந்த கோட்பாடு ஞானமானது என்று கண்டு, நேபுகாத் நேச்சார் தனது தேவன் மேல் மெரோதாக்கின் நாமத்தில், தானே இந்த உலகத்தை ஆசீர்வதிக்கிறவனாக ஆக வேண்டும் என்று நினைத்தான். தனது தேவன் தனக்கு வெற்றி கொடுக்கவில்லையா? தானே நியாயம் கற்பித்துக் கொண்டான். ஆகையால் தனது தேசம் உலகத்தை ஆசீர்வதிக்கிற மாபெரும் வேலையை செய்ய தகுதியானதில்லையா என்று நினைத்தான். ஆகையால் என்ன ஆனாலும் பரவாயில்லை என்று எண்ணி அதற்கான முயற்சியில் இறங்கினான்.

### பெல்–மெரோதாக்கின் பொற்சிலை

இந்த நேபுகாத் நேச்சார் தனக்கு வெற்றிகளைக் கொடுத்ததாக நம்புகிற தனது தேவனை கனப்படுத்த விரும்பினான். அவனது தேவனை உலக தேசங்களின் தேவனாக்க விரும்பினான். அவனது அரசாட்சியின் கீழ் இருந்த சகல ஜனங்களும் இந்த ஒரே தேவனை வணங்க வேண்டும். ஒரே மதம் இருப்பதால் அவனது ராஜ்யத்தில் இருந்த பல்வேறு பொருத்தமற்ற கொள்கைகளை இணைக்க உதவும் என்று நினைத்தான். ஒரு பரந்த சம பூமியிலே மாபெரும் சமாதான திருவிழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு படை வீரர்கள், ராஜ குமாரர்கள், உயர்ந்தவர்கள், பார்வையாளர்கள் அழைக்கப்பட்டார்கள். தொன்னூறு அடி உயர பெல்–மெரோதாக்கின் பொற்சிலை சம பூமியிலே ஸ்தாபிக்கப்பட்டது. அது திட தங்கத்தில் செய்யப்பட்டது என்று யூகிக்க வேண்டிய அவசியமில்லை. எனினும் ஹெரோடோடஸ் என்ற சரித்திர ஆசிரியர் பாபிலோனில் திட தங்கத்தில் செய்யப்பட்ட சிலை நாற்பத்தி மூவாயிரம் பவுண்டு எடை கொண்டது என்று குறிப்பிடுகிறார்.

விழாவின் மகா நாள் வந்தது. கவனர்கள், தளபதிகள், மாகாண ஆளுனர்கள், நியாயாதிபதிகள், பொக்கிஷதாரர்கள், நீதி சாஸ்திரிகள், வழக்கறிஞர்கள் மற்றும் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் தங்கள் அலுவலக உடையில், கீத வாக்கியங்கள் முழங்க, கொடிகள் பறக்க கூடியிருந்தனர். அது கோலாகாலமான காட்சியாக இருந்திருக்க வேண்டும். நேபுகாத் நேச்சாரின் பல்வேறு சாதனைகளுக்கான பெருமை மற்றும் கொண்டாடப்படவிருந்த சமாதான விழாவுக்கு நாம் ஒத்த உணர்வு கொள்ளலாம். இப்படியாக அவனது ஆட்சி வெற்றி கொண்டதாக இருந்தது அதிலிருந்து எல்லாமே வெற்றிதான். உலகமானது அமைதி, செழிப்பு மற்றும் சந்தோஷமான மாபெரும் காலத்தை பெற வேண்டியிருந்தது.

பேரரசின் மத ஒற்றுமையின் பொருத்தமான நேரம் பெல்–மேரொதாக்கின் பொற்சிலையை பொதுவான தொழுகையின் மூலம் விளக்கப்படவிருந்தது. அறிவிப்பு கொடுக்கப்பட்டு, மேள வாத்தியங்கள் முழங்கும் போது. அனைவரும் கீழே விழுந்து சிலையை வணங்கி பணிந்து கொள்வார்கள். அந்த சிலை நேபுகாத் நேச்சாரை அதன் மூலம் அவனது தெய்வத்தை குறிப்பிட்டது.

### விசுவாசமின்மை! நன்றி மறத்தல்! ராஜ துரோகம்!

ராஜா ஏற்படுத்தி வைத்த மூன்று மாகாண கவர்னர்கள், ராஜாவின் கட்டளையை மீறி பெல்–மேரோதாக்கின் சிலையை வணங்க மறுத்ததை ராஜாவுக்கு தெரிவிக்கும் வரை எல்லாம் நல்லபடியாக சென்று கொண்டிருந்தது. ராஜாவின் அதிகாரம் அவமதிக்கப்பட்டது. கடந்தகால சகல ஆணைகளையும் போல கீழ்ப்படியாமைக்கு தண்டனை மிகவும் கடுமையானதாக இருந்தது. பாபிலோனின் அமைதியை குலைத்த அந்த மூன்று பேர் யார்? மாபெரும் சமாதான விழாவை கெடுத்தவர்கள் யார்? சிறைபிடிக்கப்பட்ட போது ராஜாவினால் மிகவும் கிருபையுடன் நடத்தப்பட்ட மூன்று

எபிரேயர்கள். அவர்கள் ராஜாவுக்கு அவ்வளவு கடன்பட்டிருந்தார்கள். ராஜா அவர்களுக்கு கல்வி மாத்திரம் அளிக்காமல் அவனது ராஜ்யத்தில் உயர்ந்த நிலைமைக்கு அவர்களை உயர்த்தியிருந்தான். நன்மை செய்தவர்க்கு எப்படிப்பட்ட நன்றி கெட்ட தன்மை, எப்படிப்பட்ட துரோகிகளாக இருந்தார்கள்!

சந்தேகத்திற்கிடமில்லாமல், இதுவே நேபுகாத் நேச்சாரின் பார்வையாக இருந்தது. அவனது சகல கவர்னர்களிலும் இந்த மூன்று பேரையும் இழக்க வருத்தப்பட்டான். அவர்கள் மிகவும் நம்பகமானவர்கள். ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவனது ஒழுங்குமுறைகளுக்கு கீழ்ப்படியாமையை அனுமதிக்க இயலாது. முப்பத்தி ஐந்து வயதுள்ள இந்த மூன்று பேரும் தனது அதிகாரம், வல்லமை மற்றும் எதேச்சாதிகாரத்திற்கு சாவால் விடுவதை எண்ணிப்பார்க்க முடியவில்லை. ராஜா அவர்கள் மேல் இரக்கங்கொண்டு இந்த முரண்பாடான கவர்னர்களுக்கு அவர்களது ஜீவனுக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்க விரும்பினான். மறுபடியும் கீதவாத்தியங்கள் முழங்கும் போது அவர்கள் பிடிவாதமாய் இருந்தார்களானால் அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும். எரிகிற அக்கினி சூளை தயாராயிருந்தது,

இந்த மூன்று எபிரேயர்களின் தைரியம் சரித்திர ஏடுகளில் உயர்ந்து நிற்கிறது. எந்த தேவனும் என் கையிலிருந்து யாரையும் தப்புவிக்க இயலாது என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்தினான். அவர்களது நகரமாகிய எருசலேம் கவிழ்க்கப்பட்டு போனது. அவர்கள் சர்வ உலக ராஜாவின் கட்டளையை மீறுவதில் பிடிவாதமாக இருந்தால் அவர்களை காப்பாற்றவோ, உதவி செய்யவோ அவர்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. அவர்கள் ஆராதிக்கும் அவர்களது தேவன் யேகோவா எரிகிற அக்கினி சூளையிலிருந்து தங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் என்பதே அவர்களது பதிலாக இருந்தது. இல்லையென்றால், அவர் அவர்களை தப்புவிக்காமல் போனாலும், அவர்கள் அவருடைய விசுவாசமுள்ள ஊழியர்களாக இருந்து அவரை மட்டுமே சேவிப்போம் என்று கூறினார்கள். அவர்களது விசுவாசமும் தைரியமும் எவ்வளவு உயர்ந்தது! இப்படிப்பட்ட விசுவாசமும் இப்படிப்பட்ட தைரியமும் தேவனை பிரியப்படுத்தும் என்று நாம் நிச்சயிக்கிறோம். அவரை நம்புகிறவர்களை எல்லா சமயங்களிலும் விடுவிப்பார் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. இந்த எபிரேயர்கள், தேவனுடைய ஞானமான திட்டம் என்ன என்பதையும், சிறியவர்களாகிய அவர்களது ஜீவனைக் குறித்த அவரது சித்தம் என்ன என்பதையும் தாங்கள் அறியவில்லை என்று கூறினார்கள். ஆனால் அவரது வல்லமையிலும் அன்பிலும் நாம் நம்பிக்கையாய் இருக்கிறோம். அவரைக் கண்டுபிடிக்க முடியாத இடத்திலும் நாம் நம்பலாம்.

**சூளை அதிகமாக சூடாக்கப்பட்டது**

நேபுகாத் நேச்சார் ராஜா கடும் கோபங்கொண்டான் என்று நாம் படிக்கும் போது, சூழ்நிலையை நாம் ஒத்துணர்வுடன் பார்க்க வேண்டும். அவன் உலகத்தை வெற்றி கொண்டான். அவன் இப்பொழுது அவனால் உயர்த்தப்பட்ட மூன்று வாலிபர்களால் அவமதிக்கப்படுகிறான். தன்னுடைய அரசாங்கத்துக்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தைப் பற்றிய ஒரு மாபெரும் பாடத்தை சகல தேசங்களுக்கும் கொடுத்தான். அந்த அரசாங்கத்தை அவனது பிரதிநிதிகளே களங்கப்படுத்த அவன் அனுமதிக்க முடியுமா? மறுபுறம், அவர்கள் கொல்லப்போகிற மனிதர்கள் அவனால் உயர்த்தப்பட்டவர்கள் என்பது வெளியரங்கமாக இருந்தது. இந்த நிலைமைகளின் கீழ் ராஜா சீற்றம் கொண்டதில் நாம் ஆச்சரியம் கொள்ள முடியுமா? அந்த மாபெரும் விழாவை பொருத்தவரையில் இந்த ஒரு இணக்கமின்மையே ராஜாவுக்கு மிகுந்த ஏமாற்றத்தை கொடுத்தது. அது உலகிற்கு ஆசீர்வாதங்களையும் அவனுக்கு கனத்தையும் கொடுக்கும் என்று நினைத்திருந்தான். அவன் கடுங்கோபத்தில் சூளையை ஏழு மடங்கு அதிகமாக சூடாக்கும்படி கட்டளையிட்டான்.

தற்கால ஆராய்ச்சிகள் கற்பூர கிணறுகள் இருந்திருக்க வேண்டும் என்று காண்பிக்கிறது. அந்த பெரிய திறந்த சூளைக்கு எரிபொருள் இருந்திருக்க வேண்டும் என்று நாம் அனைவரும் அறிவோம். மூன்று எபிரேயர்களும் கட்டப்பட்டு, ராணுவத்தில் பலசாலிகளாக இருந்தவர்களைக் கொண்டு எரிகிற அக்கினி சூளையிலே போடப்பட்டார்கள். அவர்களை தூக்கிக்கொண்டு போன ராணுவத்தினர் அக்கினி தனலினால் எரிந்து போனார்கள். நாப்தா (கற்பூரம்) என்ற எரிபொருளை அதிகமாக தொடர்ந்து போட்டு அக்கினி தழல் எழுபத்தி ஐந்து அடி இருந்ததாக யூத புராணக்கதை கூறுகிறது. ராஜா, யேகோவா தேவனின் வல்லமையை முன்னரே அறிந்திருந்தபடியால், அவன் உடனே சூளையை பார்த்தான். இப்படி அவர் மேல் விசுவாசமுடைய எபிரேய வாலிபர்கள் புத்தியீனமாக இருந்தார்கள். ஆனால் ராஜா சூளையை பார்த்த போது, நான்கு பேர் எந்த சேதமும் இல்லாமல் அக்கினியின் நடுவிலே உலாவுவதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அவன் பாதுகாப்பாக அதன் அருகே சென்று மந்திரிகளிடம் கூறியதாவது: "மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினியிலே போட்டுவித்தோம். இதோ நான்கு பேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன். நாலாம் ஆளின் சாயல் தேவ புத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது" என்றான்.

அவன் என்ன செய்தான்? இப்பொழுது அவன் என்ன செய்ய வேண்டும்? அவன் அந்த மூன்று பேரையும் அழைத்து, "உன்னதமான தேவனுடைய தாசர்களே, நீங்கள் வெளியே வாருங்கள்" என்றான். அவர்கள் எந்தவித சேதமுமில்லாமல் அவர்களது உடையில் அக்கினியின் மணம் கூட இல்லாமல் வெளியே வந்தார்கள். நேபுகாத் நேச்சார் அற்புதத்தை அங்கீகரித்து தேவனை ஸ்தோத்தரித்தான். அவர் தம்மை நம்பின தாசர்களை தமது தூதர்களைக் கொண்டு விடுவிக்கிற தேவன். அவர்கள் தங்கள் தேவனைத் தவிர வேறு யாரையும் தொழவோ, சேவிக்கவோ மாட்டோம் என்று தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்து ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனவர்கள். "அவரை அண்டிக்கொள்கிற யாவரும் பாக்கியவான்கள்."

R4874

# IN A DEN OF LIONS
# சிங்கத்தின் குகையில்

"கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களை சூழப் பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். " சங்கீதம் 34:7

இந்த பாடத்தின் காலத்தில் தானியேல் வயதானவராக இருந்தார். அவரை நம்பிக் கொடுத்த அரசாங்க வேலையில் நீண்ட காலம் புத்திசாலியாகவும் உண்மையுள்ளவராகவும் ஊழியம் செய்தார். அவர் பாபிலோனிய ராஜ்யத்தின் அழிவை கண்டிருந்தார். அதன் இடத்தில் மேதோபெர்சிய ராஜ்யம் வந்தது. இவர்களும் தானியேலின் நல்ல குணத்தை அங்கீகரித்தார்கள். கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பது, அரசாங்க ஊழியத்தில் உண்மைத்தன்மை மற்றும் நீதியின் கொள்கைகளுக்கும் தேவனுக்கும் கீழ்ப்படிதல் போன்றவை. புதிய உலக பேரரசு நூற்றி இருபது மாகாணங்களாக பிரிக்கப்பட்டு நூற்றி இருபது கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு மேல் மூன்று பிரதானிகள் ஏற்படுத்தப்பட்டார்கள். இந்த பிரதானிகளுக்கு மேல் தரியு ராஜாவும் அவனுக்கும் மேலாக சக்கரவர்த்தி கோரேசும் இருந்தார்கள். தானியேல் அவருடைய திறமை மற்றும் நேர்மையினால் மூன்று பிரதானிகளில் ஒருவராக இருந்தார்.

இந்த உயர்ந்த, அர்ப்பணம் செய்த யூதருக்கு எப்படிப்பட்ட பாராட்டு கொடுக்கப்பட்டுள்ளது! கடந்த கால ஆட்சியாளர்களின் மனதில் அவரது திறமை எந்த அளவுக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது! இப்படிப்பட்ட நன்மதிப்பும் அதிகாரமும் உடையவரை அவர்கள் விரும்பியது உலக ஆளுகையை பொருத்தவரை அவர்களது உயர்ந்த நோக்கத்தை காண்பிப்பதாக இருந்தது. உண்மையிலேயே அநேக உயர்ந்த குணமுடையவர்களிடத்தில் இது உண்மையாக இருக்கிறது என்று நாம் நம்புகிறோம். தற்கால மன்னர்கள் தங்கள் மக்களில் திறமையுள்ளவர்களிடத்தில் அரசாங்கத்தை நிர்வகிக்கும்படி கொடுக்கிறார்கள்.

மேசியாவின் ராஜ்யத்தை குறிப்பிடும் போது, அதில் மானிட அரசாங்கத்தை நிர்வகிப்பது பூரணர்கள் மாத்திரமல்ல, அது தெய்வீக வல்லமையால் ஆதரிக்கப்படும். அதற்கு முன்பு முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும். (பிலிப்பியர் 2:10,11)

### தானியேல் மேல் பொறாமை

கடந்த கால மற்றும் தற்கால கிழக்கத்திய தேசங்களின் அரசாங்கங்கள் நேர்மையற்றதாக, தற்காலத்தில் "லஞ்சம்" என்று குறிப்பிடப்படுகிறவைகளாக இருந்திருக்கின்றன என்று நாம் அறிவோம். உதாரணத்திற்கு: சீனா-ஜப்பான் போரில் பீரங்கி மற்றும் யுத்த தளவாடங்களுக்கான ஒப்பந்தங்கள் அரசாங்க அதிகாரிகளுக்கு நெருக்கமானவர்களுக்கு கொடுக்கப்பட்டன. அங்கே மிகவும் அவமானகரமான நேர்மையின்மை செயல்படுத்தப்பட்டது. உதாரணத்திற்கு மர பீரங்கிகள் வழங்கப்பட்டன. தரமான பொருளுக்கு கொடுக்கப்பட்ட பணம் அரசாங்கத்துக்கு பயன்படுத்தப்படாமல் திருடர்களுக்கு வழங்க பயன்படுத்தப்பட்டது. ஒரு மாபெரும் பேரரசில் மூன்று பிரதானிகளில் ஒருவராக இருந்த தானியேலைப் போன்ற ஒருவர், லஞ்ச லாவண்யங்களுக்கு எதிராக மற்றவர்களுக்கு தடையாக இருந்திருப்பார். அவரை அதிலிருந்து அகற்ற முடியாது என்பதை உணர்ந்து அவரிடத்தில் அவர்கள் குற்றம் கண்டுபிடித்து அவரை நீக்குவது தான் முதல்படியாக இருந்தது. ஆனால் மனிதனுடைய நேர்மை மற்றும் விசுவாசம் பொதுவாக இந்த திசையில் நம்பிக்கை தராது.

கடைசியாக ஒரு திட்டம் தீட்டப்பட்டது, அவர்கள் தானியேலின் வாழ்க்கை தெய்வ பக்தியை அடிப்படையாக கொண்டது என்பதை அறிவார்கள். தானியேலை அவரது தேவனைப் பற்றிய வேத விஷயத்தில் குற்றம் கண்டுபிடித்தால் ஒழிய வேறு எதிலும் குற்றம் கண்டுபிடிக்க முடியாது என்று அவர்கள் அறிந்தார்கள். தரியு ராஜா, மற்ற மனிதர்களைப் போல முகஸ்துதி மூலம் நெருங்கக்கூடியவராக இருந்தான். கிழக்கத்திய தேசங்களில் ராஜா மதங்களுடன் மிகவும் ஒன்றித்து இருப்பது வழக்கமாக இருந்தது. அவன் தனது தேவனுக்கு மிகவும் பிரியமானவனாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த உயர்ந்த பதவிக்கு அவன் வந்திருக்க முடியாது என்று நினைத்தான்.

இந்த கோட்பாட்டின்படி, உயர்ந்த பதவியில் இருந்த (பிரதானிகள் மற்றும் தேசாதிபதிகள்) சதிகாரர்கள், ராஜ்யத்தை பலப்படுத்தி ஒன்றுப்படுத்த ஒரு திட்டத்துடன் ராஜாவை அணுகினார்கள். அந்த திட்டம் இதுதான்: ஒரு மாதம் வரை யாரும் ராஜாவைத் தவிர அவர்களது தேவன் அல்லது தேவர்களிடமோ விண்ணப்பம் பண்ணக்கூடாது. இந்த காரியம் ராஜாவைப் பற்றிய ஒரு உயர்ந்த எண்ணம் மக்கள் மனதிலே ஏற்படும் என்பது அவர்களது கூற்றாக இருந்தது. தரியு ராஜா இதை ஏற்றுக்கொண்டு கட்டளை கொடுத்தான். தானியேலின் நிலைமை என்ன என்பதை குறித்து ஒரு கணம் கூட நினைத்து பார்க்கவில்லை. அவனது பிரதானிகள், தானியேலை கண்ணியில் சிக்க வைத்து மிகவும் நம்பிக்கை உடைய அதிகாரியை சட்டப்படி மரண தண்டனைக்குள்ளாக்க நாடுகிறார்கள் என்று ஒரு கணம் கூட நினைத்துப் பார்க்கவில்லை.

### அனுதினமும் மூன்று வேளை ஜெபித்தார்

தானியேல் இந்த கட்டளையை கேள்விப்பட்டார். ஆனால் வழக்கம் போல் அவர் தனது வீட்டிற்குள்ளே சென்று, பலகனியை எருசலேமை நோக்கி திறந்து வைத்து மூன்று முறை ஜெபித்தார். காலை, மதியம் மற்றும் இரவு மூன்று வேளையும் தேவனுடன் தான் அர்ப்பணம் செய்ததையும், பரிசுத்த தேசத்தைக் குறித்த கிருபையான வாக்குத்தத்தங்களை மனதிற்கு கொண்டு வந்து, அது முழு உலகத்தின் மையமாக ஆக வேண்டும் என்பதையும் பரிசுத்த ஜனங்களாக ஆக வேண்டும் என்பதையும் நினைவு கூர்ந்தார். முடிவாக இவர்கள் மூலமாக தெய்வீக ஆசீர்வாதங்கள் சகல ஜாதிகளுக்கும், கோத்திரங்களுக்கும் ஜனங்களுக்கும் பாஷைக்காரருக்கும் விரிவுப்படுத்தப்படும் என்பதையும் நினைவு கூர்ந்தார்.

அறுவடை சமயத்தில் அரிவாள்களை கூர்மைப்படுத்துவதில் நேரமோ அல்லது சக்தியோ வீணாகாது என்று யாரோ குறிப்பிட்டது போல ஜெபத்தில் நேரத்தை செலவிடுவது வாழ்க்கையின் காரியங்களில் நஷ்டமில்லை. தானியேலைப் போல மண்டியிட்டு முறையாக தொடர்ந்து ஜெபிக்கிற புருஷனோ அல்லது ஸ்திரீயோ உலகில் சிறந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்படியாக உலக காரியங்களிலிருந்து எடுக்கப்பட்ட தருணங்கள் நல்லவிதமாக பயன்படுத்தப்பட்டு ஏற்ற ஆசீர்வாதத்திற்கு மேலானதை தொழுகை செய்கிறவர்கள் மேல் கொண்டு வரும். இதுதான் அவன் செய்ய வேண்டியது. ஜெபத்தை புறக்கணித்து ஒரு அர்ப்பணம் பண்ணப்பட்ட வாழ்க்கையை வாழ்வது இயலாத காரியம். ஜெபிக்க நேரம் இல்லாமல் தானியேல் என்ன பண்ணுவார்! அந்த புறஜாதியார் தேசத்தில் தேவனுடனான அவருடைய விசுவாசம் எப்படி நீடித்திருக்கும்? கோட்பாடுகளுக்கான அவரது விசுவாசம் ஊழல்களுக்கிடையே எப்படி பராமரிக்கப்படும்? அது அவருடைய சிருஷ்டிகருடனான ஐக்கியமாக இருந்திருக்குமா? "நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" என்பதை உணர்வதின் மூலம் கிறிஸ்தவர்களுக்கு இந்த சலுகை இன்னும் அதிகரிக்கும். இந்த பரிகாரியின் நாமத்தில் இரக்கத்தை பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டையில் நாம் சேரலாம். (எபிரேயர் 4:16)

### யேகோவா தேவன் தமது தூதனை அனுப்பினார்

சதிகாரர்கள் தானியேலை தேடினார்கள். சாட்சிகளை சாட்சி கூற தயார்படுத்தினார்கள். தானியேல் ஏதாவது தவறு செய்திருப்பார் என்று அல்ல. ஆனால் ராஜா சிக்குண்டு ஏற்படுத்தி, கையெழுத்திட்ட அரசாணையை அவர் மீறியிருந்தார் என்பதற்காக ஆகும். இந்த காரியம் ராஜாவிடம் கொண்டுபோகப்பட்டது. ஒருமுறை கையெழுத்து போட்டு முத்திரையிட்ட அரசாணை மாற்றப்படக்கூடாது என்கிற கொள்கையும் ராஜாவிடம் ஞாபகப்படுத்தப்பட்டது. தரியு ராஜா தன் கண்ணியில் சிக்கி தன் கால்களை தானே கட்டிக் கொண்டதை உணர்ந்தான். அவனது அரசாணையின் விளைவை தவிர்க்க நாள் முழுவதும் முயற்சி செய்து எதையும் செய்ய முடியவில்லை. அவன் காரியத்தை தானியேலிடம் விவரித்துக் கூறி, அவர் விசுவாசிக்கிற தேவன் அவரை விடுவிப்பார் என்று உறுதிப்பட கூறினான். தானியேலின் வாழ்க்கையில் அவரது நேர்மைக்கான சாட்சியம் எப்படிப்பட்டதாயிருக்கிறது!

தானியேல் சிங்கக் கெபியில் போடப்பட்டு அதன் வாசலில் கல்லை வைத்து மூடி ராஜா அதில் தன் முத்திரையையும் கையெழுத்தையும் போட்டான். ராஜா இரவு முழுவதும் நித்திரை பண்ணாமல் மனவேதனையில் இருந்தான் என்று நாம் அறிவிக்கப்படுகிறோம். அவனது உண்மையுள்ள அதிகாரியை அநியாயமாக நடத்தப்பட்டதையே நினைத்துக் கொண்டிருந்தான். ராஜா இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் இருந்து அதிகாலையில் எழுந்திருந்து தானியேல் உயிரோடு இருக்கிறாரா அல்லது இல்லையா என்பதை அறிய தானியேலிடம் சென்றான். தானியேல் உயிரோடு இருக்கிறார் என்பதையும், அவருடைய தேவன் தமது தூதனை அனுப்பி சிங்கத்தின் வாயை கட்டிப்போட்டார் என்பதையும் அறிந்து மிகவும் சந்தோஷமடைந்தான். தானியேல் உடனே கெபியிலிருந்து தூக்கிவிடப்பட்டார்.! தானியேல் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டார்! அவரது தேவனும் நீதியானவர்! ராஜா இப்பொழுது இன்னொரு அரசாணையை ஏற்படுத்தினான். அதாவது ஒரு உண்மையான மனிதனை அழிக்க நாடின அந்த தேசாதிபதிகளை கொண்டு வரச்சொல்லி அதே சிங்கங்களின் கெபியில் போடச்சொன்னான். அழிவு தான் அவர்கள் முடிவாக இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டது.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தானியேலைப் போல உலகத்தின் தரநிலையைக் காட்டிலும் மேலாக வாழ வேண்டும். அவர்கள் மேல் எதிரிகள் எந்த குற்றமும் காண முடியாதபடி இருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் ஆராதிக்கிற தேவன் உண்மையான தேவன்.

**R4875**

## WHO WERE TYPIFIED BY THE LEVITES?

## லேவியர்கள் யாரை அடையாளப்படுத்தினார்கள்?

லேவியர்கள், "பரலோகத்தில் பெயரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபையை" அடையாளப்படுத்தினார்கள். அவர்கள் ஒரு ஆவிக்குரிய வகுப்பாராக, தெய்வீக தயவுக்குள் வந்தவர்களாக இருக்கிறார்கள்.

லேவியர்களின் சரித்திரம் முதற்பேறானவர்களை விசேஷமாக குறிப்பிடும்படியாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. முதற்பேறானவர்களின் இந்த சரித்திரம், பஸ்காவின் இரவில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் காக்கப்பட்ட முற்காலத்தை குறிப்பிடுகிறது. அந்த இரவு, பூமியின் இரவு காலமாகிய சுவிசேஷயுகத்தை அடையாளப்படுத்துகிறது. இந்த காலத்தில் தான் கர்த்தர் தமது சம்பத்து வகுப்பாரை தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த முதற்பேறானவர்களின் சபை மரணத்தை கடந்த ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். இந்த முதற்பேறானவர்கள் அனைவரும் "முதற்பேறானவர்களின் சபை" முழுவதையும் குறிக்கிறார்கள். இவர்கள் லேவி கோத்திரத்தின் மூலம் குறிப்பிடப்படுகிறார்கள். இந்த லேவியர்களிடமிருந்து ஆசாரியர்கள் சிலர் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் நமது கர்த்தரையும் அவரது அடிச்சுவட்டில் உண்மையுடன் நடக்கிறவர்களையும் அடையாளமாக குறிப்பிடுகிறார்கள். ஆகையால் முழு முதற்பேறானவர்களின் சபை கிறிஸ்துவின் சரீர அங்கங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கிற திரள் கூட்டத்தாரையும் உள்ளடக்கியிருக்கிறது. கன்னிகைகள் அவளை பின்தொடருவார்கள். (சங்கீதம் 45:14) இவர்கள் அனைவரும் "பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபையை" சார்ந்தவர்கள். ஆசரிப்பு

கூடார ஊழியத்தை சார்ந்த லேவியரின் ஊழியம் சந்தேகத்திற்கிடமில்லாமல் முன்னடையாளமான ஒன்றாக இருக்கிறது.

பிரதான ஆசாரியன் மட்டும் "வருடத்திற்கு ஒரு முறை" பாவ நிவாரண நாளில் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு சென்றார். ஆனால் உதவி ஆசாரியர்கள் இந்த நாளில் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு செல்லமாட்டார்கள். (எபிரேயர் 9:6,7) ஆனால் சமூகத்து அப்பங்களின் மேஜை, குத்துவிளக்கு மற்றும் பொன்தூப பீடம் உள்ள முதற்கூடாரத்தில் பிரவேசிப்பார்கள். அவர்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் பரலோகத்தில் கிறிஸ்துவுடன் உட்காருகிறவர்களை நிழலாக காண்பிக்கிறார்கள். (எபேசியர் 2:7) இப்படியாக இவர்கள் பொதுவான விசுவாச வீட்டாரில் மிகவும் முன்னே இருப்பார்கள். ஆரோனின் குமாரர்கள் தான் இந்த உதவி ஆசாரியர்கள். அவர்கள் ஆசாரிய குடும்பத்தினராக இருந்து, மீதமுள்ள லேவியரைக்காட்டிலும் உயர்ந்த நிலைமையையும் உயர்ந்த உரிமைகள் மற்றும் சலுகைகளையும் பெற்றிருந்தார்கள். உதவி ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்துக்கு செல்வது நமது தற்கால அனுபவங்களை குறிப்பதாக காணப்படுகிறது. எதிர்கால அனுபவத்தை அல்ல, அப்பொழுது நாம் திரையின் வழியாய் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வோம் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

தற்காலத்தில் மெய்யான லேவியர்களின் அனுபவங்கள், எதிர்காலத்தில் இருப்பதைக் காட்டிலும், தற்காலத்தில் வேறுபட்டு இருக்கின்றன. தற்போது அவர்கள் பிரகார நிலைமையில் இருக்கிறார்கள். ஏனெனில் சரீர அங்கங்களாக இருக்கிறவர்கள் மட்டுமே "தேவனுடைய ஆழங்களை" அறியும்படி பரிசுத்த ஸ்தலத்துக்குள் செல்ல சலுகை பெற்றவர்கள். ஆனால் பரிசுத்த ஸ்தலத்தின் பொருட்கள் எடுத்துச் செல்லப்படும் போது நிழலான லேவியர் பரிசுத்தமானவைகளை சுமக்கவும் எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்பட்டார்கள். பொதுவான வழியில் அவைகளைத் தொட உரிமைப் பெற்றிருந்தார்கள். ஆனால் ஆசாரியர்கள் தொடுகிற முறைப்படி அல்ல. இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்கள் மட்டுமே தெய்வீக திட்டத்தைக் குறித்த ஆழமான, முழுமையான புரிந்து கொள்ளுதலை பெற்றிருப்பார்கள் என்பதை இது குறிப்பதாக தெரிகிறது. மற்றவர்கள் இதை ஒப்பிடும் தன்மையில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். ஆனால் முழுமையாக, ஆழமாக புரிந்து கொள்ள இயலாது.

பாவ நிவாரண பலிகள் தொடர்பான ஆராதனையை லேவியர்கள் நிறைவேற்றி, பாவ நிவாரண நாளுக்கு பிறகு அவர்களுக்கு ஒரு விசேஷ ஆராதனை இருக்கும் என்பதை நாம் கவனிக்க வேண்டும். பாவ நிவாரண நாளில் ஆசாரியன் வெளியே வந்து ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காக அவர்கள் காத்திருக்கும் போது, லேவியர்கள் ஜனங்களுக்கு போதிப்பதற்கோ அல்லது அவர்களுக்கு முக்கிய பாடத்தை கற்றுக்கொள்ளுவதற்கான காலமல்ல. ஆனால் பாவ நிவாரண நாளுக்கு பிறகு லேவியர்கள் சகல ஜனங்களுக்கும் பிரமாணத்தை விளக்குவதற்கு பொதுவான போதகர்களாக இருந்தார்கள். எதிர்காலத்தில் மெய்யான லேவியர்களுக்கு இது அவர்களது வேலையின் ஒரு பகுதியாக இருக்கும். அவர்களுக்கு நிலத்தில் சுதந்தரமும் அதன் ஆசீர்வாதங்களும் இருக்காது. அவர்கள் ராஜ்ய வேலையிலும் ஜனங்களுக்கு போதிப்பதிலும் இணைந்திருப்பார்கள். அது எப்படி நடக்கும் என்பது குறித்து நமக்கு தெளிவாக தெரியாது.

பாவத்தை விட்டு திரும்பி, தேவனை நெருங்கி, முழுமையான நீதிமானாக்குதலுக்கு முன்னேறுகிற அனைவரும் பிரகாரத்தில் உள்ள லேவியரை மிகவும் சரியாக குறிப்பிடுகிறார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ளுகிறோம். அவர்கள் பாவத்தை விட்டு திரும்பி, பிரகாரத்திற்குள் வந்த சமயம், அவர்கள் நீதிமானாக்கப்பட்ட மனோபாவத்தில் இருக்கிறார்கள். இது விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் குறிக்கிறது. தேவனுக்கு இணக்கமாக இருக்கிற அனைவரும் லேவியர்களாக கருதப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையான லேவியர்கள் ஆவது அவர்கள் முழுமையாக அர்ப்பணம் செய்வதைப் பொருத்து இருக்கிறது. இந்த அர்ப்பணத்தை அவர்கள் செய்யவில்லை என்றால் ஆவிக்குரிய தளத்திற்குரிய விசேஷித்த ஆசீர்வாதங்களை பெற மாட்டார்கள். நாம் அனைவரும் லேவியர்கள் என்ற வார்த்தையின் பொருளில் அதாவது நீதிமானாக்குதலை நெருங்குவதிலும், நீதியை விரும்புவதிலும் தேவனுடன் இணக்கமாக இருக்க விரும்பி அதை நாடுவதிலும் இருக்கிறோம். மாம்சத்தின் அழுக்கு முதலானவைகளை நீக்கினோம். ஆனால் நமது சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு மரணத்தைக் கடந்து ஜீவனுக்குள் பிரவேசித்து புது ஜீவியத்தை ஆரம்பித்து அதன் மூலம் பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற "முதற்பேறானவர்களின் சபையாக" ஆகும்வரை அந்த நீதிமானாக்குதலை நாம் பெறவில்லை. தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு யாராவது பின்வாங்கினால், நிறைவாக நீதிமானாக்கப்படுதலை அடைவதிலும் நீதியான வாழ்க்கையை பெறுவதிலும், நீதியின் கொள்கைகளுக்கு நீதியாக இருப்பதிலும் தேவனோடு இணக்கமாக இருப்பதிலும் தோல்வி அடைவார்கள்.

தேவனை நெருங்கி, நீதியை சிநேகித்து, தேவனுடன் இணக்கத்தை விரும்புகிறவர்கள் தற்காலத்தில் பிரகார நிலைமையை குறிப்பதாக தெரிகிறது. இந்த சுவிசேஷ யுக முடிவில் சில காரியங்கள் நடைபெறும். முழுமையான அர்ப்பண நிலைமைக்கும் ஆவியில் ஜெனிப்பித்தல் நிலைமைக்கும் வராதவர்களும், விசுவாச வீட்டாரையும் "முதற்பேறானவர்களின் சபையையும்" சாராதவர்களும் வெளியேறி பிரகாரத்தில் இருப்பதாக அங்கீகரிக்கப்படுவது நின்று போகும். இதற்கிடையில் முன்னரே அர்ப்பணம் செய்து, "தங்கள் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து," ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலை பெற்று, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கிற சலுகைகளை கொஞ்ச காலம் அனுபவித்த வகுப்பாரிலிருந்து, தங்களது நிலைநிற்குதலை பராமரிக்காதவர்கள் இந்த யுக முடிவில் "சிறுமந்தை" வகுப்பாரிலிருந்து பிரிக்கப்படுவார்கள். அவர்கள் நிலைமை அதிலிருந்து பிரகார நிலைமையில் இருப்பதாக குறிப்பிடப்படுகிறார்கள்.

R4876

# COVETOUS CONVERSATION

## பண ஆசை

"நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். " எபிரேயர் 13:5

வேதாகமத்தில் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு, பணம் என்ற வார்த்தையை நடத்தை, வார்த்தைகளை மாத்திரமல்ல பார்வை மற்றும் வாழ்க்கையின் கிரியைகளையும் சேர்த்து பரந்த பொருளில் பயன்படுத்துகிறது. உங்கள் நடத்தை ஆசை இல்லாதிருப்பதாக என்று வசனம் அழுத்தம் கொடுக்கிறது. ஆசையுடனான எண்ணம் எப்படி நமது நடத்தையை பாதிக்கும்? மற்றவர்கள் அதிகமான செல்வத்தை அல்லது கர்த்தருடைய ஊழியத்தில் அதிகமான சந்தர்ப்பங்களை தங்களைக் காட்டிலும் அதிகமான வசதிகளை பெற்றிருக்கிறார்கள் என்பதைக் காண்கிறார்கள். அதிகமான வசதியை விரும்புகிறவர்களாகவும் சிலர் இருக்கின்றனர். அவர்களை உருவாக்குவதற்கு தெய்வீக பராமரிப்பில் திருப்தி அடையாமல் பேராசையின் ஆவியை பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

"அவர்களை உருவாக்க தேவனுடைய பராமரிப்பு" என்று நாம் சொல்லும் போது முன்னேற்றத்துக்கான முயற்சி செய்யக்கூடாது என்று நாம் அர்த்தப்படுத்தவில்லை. ஒருவர் சந்தோஷமாக இருந்தால், தான் பெற்றிருக்கிறதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக பெற முயற்சிக்கலாம், ஒரு குறிப்பிட்ட அளவான லட்சியம் பாராட்டத்தக்கது. அப்போஸ்தலர் இங்கே குறிப்பிடுவது ஏற்கனவே பெற்றிருக்கிற ஆசீர்வாதங்களை கவனியாமல், பெற்றிராதவைகளை விரும்புகிற இலட்சியமாகும். இப்படிப்பட்டவர்கள், தேவன் விரும்பினால் இன்னும் அதிகமான பெரும் ஆசீர்வாதங்களைத் தருவார் என்று கூற வேண்டும். நாம் அவருடைய பிள்ளை, ஆகையால் அவர் எனது முயற்சிகளில் அளித்த அனைத்தும் சரியானதாகவே இருக்கும் என்று கூற வேண்டும். மற்றவர்கள் பெற்றிருப்பதைக் குறித்து நாம் பொறாமைப்படக்கூடாது. நான் கர்த்தருக்காக காத்திருப்பேன்; அவர் எனக்காக அளித்தது எல்லாம் சிறந்தவை என்று நம்ப வேண்டும். எனக்காக, நான் செய்வதைக் காட்டிலும் சிறந்ததை அவர் எனக்கு தருகிறார்.

நாம் பெற்றிராததை மற்றவர்கள் பெற்றிருக்கும் போது, நாம் அதை பெற்று அனுபவிக்க விரும்புவது தான் பேராசை ஆகும். பேராசையின் கொள்கை சுய விருப்பத்தின் ஒரு கொள்கையாக இருக்கிறது. அது தன்னை இரண்டு வழிகளில் வெளிப்படுத்தும். ஒன்று, மற்ற மனிதரின் பொருளில் ஆசைப்படுதல், இரண்டாவது நாம் முன்னரே பெற்றிருக்கிறவைகளுக்கு தொடர்புடையது. தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, சகலத்தையும் அவருக்கே அர்ப்பணம் செய்கிற கிறிஸ்தவர்களுக்கு இது குறிப்பாக பொருந்தும். இப்படிப்பட்ட அர்ப்பணத்திலிருந்து பெற்றிருக்கிற சகல ஆற்றல்களும் பெறப்போகிறவைகளும் கர்த்தருக்கே உரியவை. இவைகளை தனக்கே பயன்படுத்த நாடுவதும் அவற்றை கர்த்தரின் ஊழியத்துக்கு பயன்படுத்த மறுப்பதும் கர்த்தருடன் நாம் செய்த உடன்படிக்கையின்படி கர்த்தருக்குரியதை நாமே வைத்துக் கொள்ளுவது ஆகும். கர்த்தரின் உக்கிராணக்காரனாக தன்னிடத்தில் இருப்பதை பகிர்ந்தளிப்பது தனிப்பட்டவருடைய விருப்பம். ஒரு சகோதரன் ஊழியம் செய்ய உதவும் வழியில் சில விசேஷித்த நிலைமையின் கீழ் மற்றவர் ஆலோசனைக் கொடுக்கலாம். அவர் அதை (ஊழியத்தை) கவனிக்கவில்லை. அல்லது பலியின் உடன்படிக்கையின் ஆவிக்கு மாறாக அவர் வெளிப்படையாக அபிவிருத்தி செய்து வருகிற ஒரு குணலட்சணத்தை கவனிக்கவில்லை.

கர்த்தரின் பிரியமான சில பிள்ளைகள் அவர்களது சலுகைகளாகிய பலி மற்றும் மனநிறைவு மற்றும் பெருந்தன்மையின் ஆவியை வளர்த்தல் ஆகியவைகளை உணர தவறுகிறார்கள். ஆவிக்குரிய மன்னா வழங்கப்பட்ட பின்னர் சிலர் பூமிக்குரிய மாம்சத்துக்குரிய நல்ல காரியங்களை விரும்பி, சுயநல ஆசையின் ஆவியை அல்லது பேராசையின் ஆவியை, கர்த்தருடனான ஐக்கியத்தை ஓரளவுக்கு தடை செய்ய அனுமதிப்பார்கள்; வெகு காலத்திற்கு முன்பே அவர்களுக்கு அருளப்பட்டு, அவர்களை போஷித்து வழிநடத்தி, இன்னும் அவர்களிடத்தில் இருக்கும், எப்பொழுதும் இருக்கக்கூடிய அவர்களது தலைவராகிய கர்த்தரின் ஞானத்தையும் அன்பையும் மறக்கிறார்கள். சில சமயங்களில் பேராசை, அதிக சுகங்கள், வசதிகள், செல்வங்கள் மற்றும் சமூக செல்வாக்குகளை விரும்பி வாழ்க்கையின் விதிக்கு எதிராக அதிருப்தி அடையச் செய்கிறது. சில சமயங்களில் விடுபட முடியாமல் சர்வ சிருஷ்டியும் படுகிற துன்பங்கள் மற்றும் கஷ்டங்களில் அவர்களின் பங்குக்கு எதிரான ஒரு போராட்டமாக இருக்கிறது. சில சமயங்களில் அது பிரியமானவர்களின் வியாதி மற்றும் மரணத்திற்கு எதிரான ஒரு போராட்டமாக இருக்கிறது.

எவ்வளவு விவேகமற்றது! ஆவிக்குரிய மன்னாவினால் போஷிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் காரியங்கள் அனைத்தும் கர்த்தரின் விசேஷித்த மேற்பார்வையின் கீழ் இருக்கின்றன என்பதை உணர வேண்டாமா? "அவர் மனப்பூர்வமாய் மனுப்புத்திரரை சிறுமையாக்கி சஞ்சலப்படுத்துகிறதில்லை." அவர்களது நன்மைக்காகவே என்பதை அவர்கள் நினைவுகூர வேண்டாமா? (புலம்பல் 3:33; எபிரேயர் 12:10) முணுமுணுப்பவர்களின் ஜெபங்கள் கேட்கப்படும் போது கூட எதிர்பாராத குறைபாடுகளை கொண்டு வந்திருப்பதை சிலர் கண்டிருக்கிறார்கள்.

பேராசையான (சுயநலமான) ஜெபங்கள் மிகவும் விலையுயர்ந்தவை. சிலர் செல்வங்களைப் பெற்று, சத்தியத்தையும் அதன் ஊழியத்தையும் இழந்திருக்கிறார்கள். சிலர் உடல் நலத்தை பெற்று அதோடு கூட அதிகமான சோதனைகளை பெறுகிறதைக் காண்கிறார்கள். சிலர் தங்களுக்கு பிரியமானவர்களை மரணத்தின் பிடியிலிருந்து திரும்பப் பெற்றிருந்தார்கள். அதன் பிறகு தேவன் தங்களது ஜெபத்திற்கு பதிலளிக்கவில்லை என்றும் கர்த்தருடைய ஞானம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை உண்மையுடன், திருப்தியுடன் குறை கூறாமல் ஏற்றுக்கொண்டிருந்ததாகவும் கூற விரும்புகிறார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தங்கள் எல்லைக்குள் கிடைத்தவைகளை, தேவனுடைய பரிசு என்று நன்றியுடன் ஏற்றுக்கொண்டு, ஞானத்துடன் பயன்படுத்த வேண்டும். அவர்களது விண்ணப்பமானது ஆவிக்குரிய வரங்களுக்காகவும், பொறுமையுடன் சகித்தல், மனதிருப்தி ஆகியவைகளுக்காக, முன்னரே பெற்றிருக்கிற ஆசீர்வாதங்களுக்காக இருதய பூர்வமான நன்றியுடன் இருக்க வேண்டும்.

R4876

# INTERESTING QUESTIONS
# ஆவலைத் தூண்டும் கேள்விகள்

### காளையின் இரத்தத்தின் முக்கியத்தும்

**கேள்வி:** காளையின் இரத்தம் எதைக் குறிக்கிறது?

**பதில் :** மகா பரிசுத்த ஸ்தலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இரத்தம் பலி கொடுத்தவர்களின் ஜீவனை அல்லது ஜீவிய உரிமைகளை குறிக்கிறது. ஆனால் இரத்தமே மரணத்தின் அடையாளமாக இருந்தது. இரத்தம் இரத்த நாளத்தில் இருக்கும் போது அது ஜீவனை அடையாளப்படுத்துகிறது. ஆசாரியனின் கைகளில் இருந்த காளையின் இரத்தம் பின்னர் ஆட்டுக்காடாவின் இரத்தம் அடையாளமாக குறிப்பது என்னவென்றால், மிருகம் இறந்துவிட்டது, அதற்கான ரூபகாரம் இங்கே இருக்கிறது. ஆகையால் இரத்தத்தை சமர்ப்பித்தல் என்பது பலியிடப்பட்ட ஜீவனை அதனைத் தொடர்புடைய சகல உரிமைகளையும் அர்த்தப்படுத்துகிறது.

நமது கர்த்தர் மரிக்கும் போது சில ஜீவிய உரிமைகளைக் பெற்றிருந்தார். ஜீவிய உரிமைகள் என்ற சொற்றொடர், முழு பொருளில் ஜீவனை பெற்றிராமல் முழு அர்ப்பணம் செய்த கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட நபருக்கு சரியானபடி பயன்படுத்தலாம். இப்படிப்பட்டவர்கள் மரணத்தைக் கடந்து ஜீவனுக்குள் சென்றவர்கள் என்று கருதப்படுகிறார்கள். நீதிமானாகுதல் சாட்டப்படுகிற அந்த கணத்தில் அவன் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசிக்கிறான். பரிகாரியானவர் தமது நிறைவிலிருந்து அவனது குறைவை சரிகட்ட தமது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணியிருக்கிறார். இப்படியாக அவன் ஏற்புடையவராக ஆக்கப்பட்டு முழுமையான நிலைமையில் இருப்பதாக கருதப்படுகிறான். பிறகு அவன் ஜீவிய உரிமைகளைப் பெற்றிருக்கிறான். அந்த ஜீவிய உரிமைகள் தேவனிடம் அர்ப்பணித்ததாக அல்லது பலியிடப்பட்டதாக சொல்லப்படுகிறது. இந்த முறையில் அந்த நபர் மகா பிரதான ஆசாரியரின் ஒரு சரீர அங்கமாக ஆகிறான் என்று சொல்லப்படலாம். கிறிஸ்து அவனுடைய குறைவை சரிகட்ட தம்முடைய புண்ணியத்தை அவனுக்கு சாட்டுதல் பண்ணுகிறார். இந்த சாட்டுதல் மூலம் பிதாவானவருக்கு பிரியமுள்ளவராக ஆக்கப்பட்டு மகா பிரதான ஆசாரியரின் சரீர அங்கமாகிறார்.

நமது பலியை கொடுப்பதற்கும் நம்மை சமர்ப்பித்தலுக்கும் வித்தியாசம் உண்டு. நாம் அல்ல, பிரதான ஆசாரியனே பலியிடுகிறார். பிரதான ஆசாரியர் ஒருவனை தமது சரீரத்தின் அங்கமாக ஏற்றுக்கொள்ளுவதற்கும் முன்பு அவனுக்கு ஜீவிய உரிமைகளை கொடுப்பதற்கு தமது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணுகிறார். பூரணனாக கருதப்படுவதினிமித்தமாக ஒருவன் ஜீவிய உரிமையை தம்மை பலியாக ஒப்புக்கொடுக்க அனுமதிக்கிற நிலைமையைப் பெறுகிறான்.

நமது கர்த்தர் மரிக்கும் போது ஜீவிய உரிமைகள் அனைத்தும் காளையின் இரத்தத்தால் அடையாளமாக குறிப்பிடப்படுகிறது. அந்த இரத்தத்தைக் கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்தில் தெளித்தல் நடைபெற்றது.

பிரதான ஆசாரியனின் கையிலிருந்த கத்தி காளையை வெட்டி பலி கொடுப்பது ஒரு கண நேரம். அந்த கண நேரம், யோர்தானில் மனிதனாக மரித்து, ஒரு புது சிருஷ்டியாக எழுந்த அந்த கணத்தை குறிப்பிடுகிறது. "நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்." ஆனால் அவர் தம்மை புது சிருஷ்டியாக அர்ப்பணம் பண்ணாமல் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக அர்ப்பணம் பண்ணினார். அவர் அங்கே பலியாக கொடுத்தது தமது பழுதற்ற மனிதத்தன்மையை ஆகும். இதை அவர் குமாரத்துவ நித்திய ஆவியினாலும் தேவனிடம் உள்ள விசுவாசத்தினாலும் கொடுத்தார். இது தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்ட சரியான தருணமாக இருந்தது. பிறகு அவர் ஆசாரியனாக அங்கீகரிக்கப்பட்டார். கிறிஸ்து பூமியில் இருந்திருந்தால், பூமியின் தளத்தில் இருந்திருந்தால், அவர் ஆரோனின் குடும்பத்தில் இராததினால், மாம்சத்தின்படி ஆசாரியராயிருக்க முடியாது. ஆகையால் அவர் சார்ந்திருந்த ஆசாரியத்துவ முறைமை ஆவிக்குரிய முறைமையாக இருந்தது. இதைக் குறித்து வேத வாக்கியம் கூறுகிறதாவது: "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்." (சங்கீதம் 110:4) அவர் மாம்சத்தின்படி ஆசாரியரல்ல. ஆனால் புது சிருஷ்டியின்படி ஆசாரியராயிருக்கிறார்.

அவரது பலியின் செயலினால் பிரதான ஆசாரியன் என்ற அதிகாரம் வந்தது. பிரகாரத்திற்கு காளை கொண்டு வரப்பட்டது, பலியின் நோக்கங்களுக்காவே ஆகும். இயேசுவுக்கும் அப்படியே இருக்கிறது. அவர் யோர்தானுக்கு யோவானிடம் வரும் போது அவர் தம்மையே அர்ப்பணித்தார். இதை பிதா அங்கீகரித்தார். கர்த்தரின் சீஷர்கள் தங்களை சமர்ப்பித்தனர். ஆனால் பெந்தெகொஸ்தே நாள் வரை அவர்கள் பலிகளாகவோ அல்லது ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாகவோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்த நாளில் அவர்கள் காத்திருக்கும் போது, தேவன் பலியை ஏற்றுக்கொண்டு, அந்த கணத்தில் அவர்களை ஆசாரியர்களாக்கினார்.

### நீதியை சாட்டுல்

**கேள்வி :** கிறிஸ்து தமது நீதியை அவரது சரீர அங்கங்களுக்கு சாட்டுதல் பண்ணினரா?

**பதில் :** நமது கர்த்தர் தமது நீதியை சாட்டினார் என்று நாம் சொல்லும் போது, அவர் பிரதான ஆசாரியனாக தமது சொந்த நீதியை கொடுத்தார் என்று நினைக்கக்கூடாது. ஆனால் அவர் தமது மானிட பலியின் புண்ணியத்தை நமது சார்பாக சாட்டுதல் பண்ணுகிறார். அவர் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக தமது ஜீவனை கொடுத்த போது, அவர் எந்த அளவிலும் மரண தண்டனைக்குட்பட்டவராயிருக்கவில்லை. அந்த பலியில் ஒரு புண்ணியம் இருந்தது. அவர் அர்ப்பணித்த பூமிக்குரிய ஜீவிய உரிமைகள், அவரது கணக்கில், உலக மனுக்குலத்தை மறுசீரமைக்கும், மறுவாழ்வு அளிக்கும் உரிமையை அவருக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த பலியின் புண்ணியம்

உலகிற்கு கொடுக்கப்படுவதற்கு முன்பு, நமது அபூரணத்தை மூடுவதற்கு நமது நீதிமானாக்குதல் அடிப்படையாக ஆக்கப்படுகிறது. நமது மறுசீரமைத்தலுக்கு அது பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடும். ஆனால் இந்த யுகத்தில் அது தேவனுடைய திட்டமில்லை. ஆகையால் கிறிஸ்துவின் புண்ணியம் விசுவாசிகளுக்கும் அர்ப்பணம் செய்தவர்களுக்கும் சாட்டப்படுகிறது. மேலும் அது அவர்களது ஓட்டத்தின் முடிவில் அவர்களது அபூரண மண்பாண்டத்தின் கறைகளையும் அறியாமல் செய்த மீறுதல்களையும் மூடுகிறது.

### நீதியும் புண்ணியமும்

**கேள்வி :** நமது கர்த்தரின் நீதிக்கும் அவரது புண்ணியத்திற்கும் என்ன வேறுபாடு?

**பதில் :** நமது கர்த்தரின் நீதி என்பது, அவர் மனிதனாக, சோதனையில் இருந்த போது அவரது நீதியான செயல்கள், அவரது நன்னடத்தை மற்றும் அவரது பூரண குணலட்சணம் ஆகும். புண்ணியம் என்பது அவரது நற்கிரியையின், குணலட்சணத்தின் தெய்வீக மதிப்பீடு ஆகும். அவர் மனிதனாக இருந்தது முடிவுக்கு வந்ததிலிருந்து நமது கர்த்தர், நிச்சயமாக, மானிடனாக நீதியை பெற்றிருக்கவில்லை. அவருடைய அர்ப்பணத்திற்கு முன்பு அவருடையதாக இருந்ததும் அவரால் பராமரிக்கப்பட்டதுமான அவரது நீதி தெய்வீக பார்வையில் புண்ணியத்தை அமைத்தது. அது இப்பொழுது சபைக்கு சாட்டப்படுகிறது. சீக்கிரத்தில் முழு உலகத்தின் பாவங்களை அழிப்பதற்கு பயன்படுத்தப்படும். அது நிறைவான புண்ணியமாக இருக்கிறது. ஏனெனில் ஒரு மனிதன் மரண தண்டனை அளிக்கப்பட்டான். பின்னர் இன்னொரு மனிதன் ஜீவனுக்கு பாத்திரராக ஆனார். ஆகையால் இந்த புண்ணியம் ஜீவனை கொடுத்ததின் மதிப்பு மரணத்திற்கு பாத்திரமானதல்ல. அது அவரால் வழங்கப்படுவது தெய்வீக ஏற்பாட்டில் இருக்கிறது.

### உண்மை பொருளில் பொருத்த வேண்டும்

**கேள்வி :** ஆரோனின் ஆசாரியத்துவ முறைமை ஆயிரம் வருட யுகத்தில் அப்பியாசப்படுத்தப்படும் என்று எந்த வேதவாக்கியமாவது காண்பிக்கிறதா?

**பதில் :** மல்கியா புத்தகத்தில் இப்படி போதிப்பதாக புரிந்து கொள்ளும்படியான ஒரு வேத வாக்கியம் இருக்கிறது. அது சொல்லுகிறதாவது: கர்த்தர் தமது ஆலயத்துக்கு வரும் போது, "அவர் உட்கார்ந்து அவர் வெள்ளியை புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார். அவர் லேவியின் புத்திரரை சுத்திகரித்து அவர்கள் நீதியான காணிக்கையை செலுத்தும்படிக்கு, அவர்களை பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்." (மல்கியா 3:3)

சிலர் இந்த வேத வாக்கியத்தை சொல்லர்த்தமாக லேவியின் புத்திரருக்கு பயன்படுத்துகிறார்கள். ஆனால் நாம் அதை உண்மைப் பொருளில் சிந்திக்க வேண்டும். அதாவது சபையானது லேவியரின் முறைமையை அமைக்கிறது. இவர்கள் ஆவிக்குரிய லேவியர்கள். இவர்கள் தேவனுக்கு பிரியமான பலியை செலுத்தும்படி மெய்யான லேவியராகவும் ராஜரீக ஆசாரியத்துவத்துக்கும் சுத்திகரிப்பவர் அவர்களை தயார்படுத்துவார்.

R4879

## THE JUDGEMENT OF THE ANGELS
## தூதர்களின் நியாயந்தீர்ப்பு

"தேவதூதர்களையும் நாம் (பரிசுத்தவான்கள்) நியாயந்தீர்ப்போம் என்று அறியீர்களா?" என்று அப்போஸ்தலர் பவுல் கொரிந்து சபையை கேட்கிறார். எப்படி பரிசுத்தவான்கள் தேவதூதர்களை நியாயந்தீர்ப்பார்கள் என்று நாம் அடிக்கடி கேட்கப்படுகிறோம்.

பரிசுத்த தூதர்களை பரிசுத்தவான்கள் நியாயந்தீர்ப்பது என்பது பொருத்தமானதாக இருக்காது என்று நாம் யோசனை கூறுகிறோம். கடந்த காலத்தில் தூதர்களுக்கு ஒரு நியாயந்தீர்ப்பு இருந்தது என்று பரி.பேதுருவால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (2 பேதுரு 2:4,5) ஜலப்பிரளயத்திற்கு முன்பு தேவதூதர்கள் அவர்களது சோதனையைப் பெற்றிருந்தார்கள் என்று அவர் கூறுகிறார். தேவனுடனான விசுவாசத்தை பராமரிக்காத தேவதூதர்கள் நரகத்திலே (Tartarus) வில் போடப்பட்டார்கள். அதாவது நமது பூமியின் வானமண்டலங்களில் வைக்கப்பட்டிருந்தனர். அங்கே "மகாநாளின் நியாயந்தீர்ப்புக்கென்று அந்தகார சங்கலிகளினாலே கட்டி அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்." (யூதா 6) இந்த "மகாநாளின் நியாயந்தீர்ப்பு" என்பது நாம் புரிந்து கொண்ட வகையில் அந்த மகா நாளில் மற்றொரு சோதனை அந்த தேவ தூதர்களுக்கு வரும் என்று பொருள்படுகிறது.

அந்த "மகா நாள்" எப்பொழுது வரும், அதன் குணலட்சணம் எப்படியிருக்கும் என்ற கேள்வி எழுகிறது. மகா நாள் என்பது ஏழாம் நாள் என்று நாம் பதிலளிக்கிறோம். தேவன் மனித சரித்திரத்தை 1000 வருடங்கள் கொண்ட ஏழு பெரும் யுகங்களாக பிரித்தார். ஆறு நாட்கள் (1000 வருட நாட்கள்) கடந்து விட்டன. ஏழாவது நாள் கடைசி நாள். (மற்ற ஆறு நாட்களைப் போல இதுவும் 1000 வருடங்களை உடையது) இந்த கடைசி நாள் மேசியாவின் மகா நாள், மேசியாவின் ராஜ்யம். அதில் அவர் உலகத்தை அதன் நியாயந்தீர்ப்புக்காகவும் அதை உயர்த்தி ஆசீர்வதிப்பதற்காகவும் ஆளுகை செய்வார். மற்ற நாட்களை ஒப்பிடும் போது அந்த நாள் மகா நாளாக இருக்கும். உலகமானது கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்த ஆறு நாட்களை ஒப்பிடும் போது அது ஓய்வு நாள். அந்த நாளில் சமாதானமும் அமைதியும் உலகத்திற்கு வரும். ஏனெனில் கிறிஸ்து ஆளுகையை எடுத்துக்கொண்டு எல்லாவற்றையும் கீழ்ப்படுத்துவார். அவருக்கு "முழங்கால் யாவும் முடங்கும். நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்." (பிலிப்பியர் 2:10,11)

அந்த மகா நாளில் மனுக்குலமும் நியாயத்தீர்ப்பை பெறும். "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்." (அப்போஸ்தலர் 17:31) தேவன் நியமித்த அந்த மகா "மனுஷன்" தலையாகிய இயேசுவும் அவரது சரீரமாகிய சபையும் ஆகும். இந்த சபையில் யூதர்கள் கொஞ்சமும் புறஜாதியார் கொஞ்சமும் இருப்பார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த மத்தியஸ்தர், தேவனுக்கும்

மனிதனுக்கும் சமாதானத்தை உண்டு பண்ணுகிறவர், "இரு திறத்தாரையும் (யூதர்கள் மற்றும் புறஜாதிகள்) தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்தார்." (எபேசியர் 2:13-17)

உலகமானது அதனுடைய நியாயந்தீர்ப்பை, பரீட்சையின் நாளை எப்பொழுது பெறும் என்பதை நாம் காணக்கூடும். அவர்களில் மானிட ஜீவியாக பரிபூரண ஜீவனை பெற யார் பாத்திரர், யார் அபாத்திரர் என்பது தீர்மானிக்கப்படும். இப்பொழுது விழுந்த போன தூதர்களின் சோதனையை பார்ப்போம்:-

**அவர்களது நியாயந்தீர்ப்பு அநேகமாக இப்பொழுது**

இந்த சோதனை இந்த மகா நாளின் ஆரம்பத்தில் இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்பதை காவற் கோபுரத்தின் முந்தைய பிரதிகளில் நாம் பதிலளித்துள்ளோம். மேலும் ஏன் ஆரம்பத்தில்? ஏனெனில் நாம் பார்த்த வகையில் ஒரே வழிதான் இருக்கிறது. அதில் இந்த விழுந்துபோன தூதர்கள் ஒரு பரீட்சையை பெறுவார்கள். பாவம் செய்வதற்கு முழு சந்தர்ப்பம் கொடுக்கப்படும். அவர்கள் விரும்பினால் பாவத்தை வெறுத்து தேவனுடன் இணக்கத்திற்கு வரலாம். தூதர்களுக்கான இந்த சோதனையை தேவன் ஆயிரம் வருட அரசாட்சியில் அனுமதிப்பார் என்று நாம் நினைக்க முடியாது. ஏனெனில் அந்த காலத்தில் துன்பமும் அழிவும் இருக்காது. சாத்தான் கட்டப்பட்டிருப்பான்; சகல தீய செல்வாக்குகளும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். இல்லை, அப்பொழுது இருக்க முடியாது. சோதிக்கப்படுவதற்கு இந்த விழுந்து போன தூதர்கள் தங்களை நிரூபிப்பதற்கு சில சுதந்தரங்களை பெற்றிருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்களது சோதனை எங்கே இருக்கும்? இந்த அடிப்படையில் (2பேதுரு 3:7) பகுத்தறிவின்படி அவர்களது சோதனை அருகில் எதிர்காலத்தில் இருக்கும் என்று நாம் முடிவுக்கு வருகிறோம். ஒரு வேளை, ஓரளவுக்கு முன்னரே ஆரம்பித்திருக்கும். எந்த வழியில்? ஜலப்பிரளயத்திற்கு முன்பு அவர்களுக்கு இருந்த சோதனையைப் போல் இருக்கலாம். அந்த சமயத்தில் என்ன ஆனது? அதன் பதிவு ஆதியாகமம் அதிகாரம் 6இல் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் வாசிக்கிறதாவது: "தேவகுமாரர் (மனித ரூபமெடுத்து - யூத 6,7) மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்கள் என்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்கு பெண்களை தெரிந்து கொண்டார்கள். (யாரிடமும் ஆலோசனை பெறாமல்).... அவர்களுக்கு பிள்ளைகளை பெற்ற போது, அவர்களும் பூர்வத்தில் பேர் பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்." இராட்சதர்களாக மனித இனத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்களாக இருந்தார்கள்.

இது, காரியங்களின் மிகவும் விநோதமான நிலைமையாக இருந்தது. இது எப்படி இருக்க முடியும் என்று நீங்கள் கேட்கலாம். தூதர்கள் இதை எப்படி செய்யக்கூடும்? இப்பொழுது பெற்றிராத சுதந்தரத்தை அப்பொழுது பெற்றிருந்தார்கள் என்று வேத வாக்கியங்கள் பதிலளிக்கின்றன. அந்த சுதந்தரம் மனித சரீரத்தை எடுத்துக் கொள்ளக்கூடிய சலுகை. அவர்கள் மனிதரைப் போல கிரியை செய்தார்கள். மனிதர்களைப் போல சாப்பிட்டார்கள். மனிதர்களைப் போல பேசினார்கள்; மனிதர்களைப் போல பிள்ளைகளை பெற்றார்கள். அவர்களுடைய தகப்பனார்கள் உயர்ந்த இனமாக இருந்ததினால் சில அம்சங்களில் இவர்களும் சாதாரண மனித இனத்தாரைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக இருந்தார்கள்.

**அவர்கள் பூமியின் வான மண்டலத்தில் கட்டுப்படுத்தப்பட்டார்கள்**

அவர்களது தவறான மார்க்கத்திற்கு பிறகு இந்த தூதர்கள், தேவனுடன் ஐக்கியத்தில் இருந்த பரலோக, பரிசுத்த தூதர்களின் ஐக்கியத்திலிருந்து பிரிக்கப்பட்டு, "மகா நாளின் நியாயந்தீர்ப்புக்காக அந்தகார சங்கிலியினால்" கட்டப்பட்டு நமது பூமியின் வான மண்டலமாகிய டார்டருவில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் பேதுருவும் யூதாவும் நமக்கு கூறுகிறார்கள். இந்த சொற்றொடருக்கு என்ன பொருள்? "அந்தகார சங்கிலி" என்பது உருவக பொருளில் சொல்லப்பட்ட சொற்றொடர் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் இனி மானிட சரீரத்தை வெளிச்சத்தில் எடுக்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால் இந்த ஆவிகள் இப்பொழுது எந்த மனிதனும் பெற்றிருக்கிறதைப் போல உண்மையான உறுதியான மாம்ச சரீரத்தை பெற முடியும் என்று உண்மையுடன் நாங்கள் நம்புகிறோம். அவர்கள் சொல்லுவது போல, உண்மைகள் நிரூபிப்பது போல இது சில சூழ்நிலைகளின் கீழ்தான் நடத்தப்பட முடியும். வெளிச்சத்தில் சரீர மாறுதலைப் பெற இன்னும் அவர்களுக்கு கஷ்டம் இருக்கிறது. "அந்தகார சங்கிலி" இன்னும் ஓரளவுக்கு அவர்கள் மேல் இருக்கிறதாக தெரிகிறது.

எனினும் ஆவி உலக நம்பிக்கையுடையோர் கூறுவதாவது: விழுந்து போன ஆவிகள் இந்த கட்டுகளை உடைத்துக் கொண்டிருக்கின்றன. மேலும் அவர்கள் இருளில் செய்யக்கூடியதை வெளிச்சத்தில் முழுமையாக செய்யக்கூடியவர்களாக, இதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக செய்யக்கூடியவர்களாக படிப்படியாக ஆவார்கள். ஆவி உலக நம்பிக்கை உடையோரின் இந்த கூற்றை வேதாகமம் ஆதரிக்கிறது. ஆனால் இந்த ஆவி உலக நம்பிக்கையுடையோர் இதையெல்லாம் மரித்தவர்கள் தான் செய்வதாக போதிக்கிறார்கள். மேலும் மரித்தவர்கள் உயிரோடிருக்கிறவர்களைக் காட்டிலும் முன்பிருந்ததைக் காட்டிலும் அதிகமாக உயிரோடிருப்பதாக கூறுகிறார்கள்; இறந்து போனவர்களின் ஆவிகள் மனித சரீரத்தை எடுப்பதாக கூறுகிறார்கள். ஆனால் வேதாகமம் இதற்கு எதிர்மாறாக, இந்த ஆவிகள் விழுந்து போன தூதர்கள் என்றும், மானிடர்களைப் பொருத்தவரையில் மரித்தவர்கள் முற்றிலுமாக மரித்தவர்கள் என்றும் உயிர்த்தெழும் வரை அதே நிலைமையில் தான் இருக்கிறார்கள் என்றும் கூறுகிறது.

ஆகையால் வேதாகமமும் ஆவி உலக நம்பிக்கையுடையோரும் எதிர்மாறான முடிவுடையவர்களாக இருக்கின்றனர். எனினும் மகா நாளின் நியாயத்தீர்ப்பின் போது, இந்த ஆவிகளின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்று எதிர்பார்க்கலாம் என்பதில் இசைவு இருக்கின்றது. நிச்சயமாக தேவன் அவைகளை கட்டுப்படுத்த முடியும். ஆனால் அவர் இப்பொழுது இந்த விழுந்து போன தூதர்கள் ஒரு பெரிய சுதந்தரத்தை பெற அனுமதிப்பார். பிறகு ஒரு பெரிய சோதனையும் பரீட்சையும் அல்லது நியாயந்தீர்ப்பு அவர்களுக்கு வரும். தெய்வீக சித்தத்தின்படி நடக்க விரும்புகிறார்களா அல்லது விரும்பவில்லையா என்பதைப் பொருத்து தான் அது இருக்கும்.

### ஒருவேளை அவர்களில் சிலர் மனந்திரும்புகிறவர்களாக இருக்கலாம்

கடந்த காலத்தில் பாவம் செய்த சில விழுந்து போன தூதர்கள் மனந்திரும்பியிருந்தால் அது நம்மை ஆச்சரியப்படுத்தாது. அவர்கள் மனந்திருந்தாத தூதர்களுடன் நீண்ட நூற்றாண்டு காலங்கள் அனுபவத்தை பெற்றிருந்தார்கள். தீய நோக்கமுடைய தூதர்கள் மூலம் துன்பத்தை அனுபவித்திருப்பார்கள். ஆகையால் இப்படியாக விழுந்து போன தூதர்களில் இரு வகுப்பார்கள் இருக்கக்கூடும். ஒரு வகுப்பார் தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்புகிறவர்கள்; மற்ற வகுப்பார் சாத்தானைப் போல் வேண்டுமென்றே தேவனுடைய சித்தத்தை எதிர்க்கிறவர்கள். சோதனைக் காலம் இந்த தூதர்களில் ஒவ்வொருவரையும் எந்த வகுப்பை சேர்ந்தவர்கள் என்பதை நிரூபிக்கும்.

வேத வாக்கியத்தில் ஒரு பகுதியை பார்க்கிற நாம் இதற்கு முன்பு இதே முக்கியத்துவம் கொடுத்து பார்த்தது இல்லை என்று நினைக்கிறோம். அதாவது அந்த வேதவாக்கியம் இதே திசையில் ஒரு கருத்தை கொடுப்பதாக தெரிகிறது. ஒருவேளை இந்த விழுந்து போன தூதர்கள் சீக்கிரத்தில் ஆச்சரியமான சக்தியை பெறுவார்கள் என்று தெரிகிறது. இப்படிப்பட்ட சக்தியை அவர்கள் ஜலப்பிரளயத்திற்கு பின்பு பெற்றதில்லை; இந்த ஆச்சரியமான சக்தி, மனுக்குலத்தை மிகவும் தீங்கு செய்யும்படி தூண்டவும் பயன்படுத்தப்படும். மோசமான ஆபத்தின் காலத்துடன் இணைந்துள்ள இரகசியமாக, ஒரு சாவியாக இருக்கும். அது இந்த யுக முடிவின் அறிகுறியாகவும் புது யுகத்தின் ஆரம்பமாகவும் இருக்கும் என்று வேதாகமம் கூறுகிறது.

### நான்கு காற்றுகளை பிடித்திருத்தல்

நமது மனதில் உள்ள வேதவாக்கியம் வெளிப்படுத்தல் 7:1–3இல் காணப்படுகிறது. இந்த உருவகமான பகுதி, பூமியின் நான்கு திசைகளிலும் நிற்கிற நான்கு தூதர்களைக் குறித்து கூறுகிறது. அவர்கள், "நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டு தீருமளவும்" பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்தாமல் நான்கு காற்றுகளை பிடித்திருக்கிறார்கள். நமது புரிந்து கொள்ளுதலின்படி தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றியில் முத்திரை போடும் சரியான காலத்தில் நாம் இருக்கிறோம். நெற்றி அறிவாற்றலைக் குறிக்கிறது. "நெற்றியில் முத்திரை போடுவது" என்பது அறிவுப் பூர்வமாக குறியிடுவது ஆகும்.

சுவிசேஷ யுக முடிவில் யாரும் பெற்றிராத சில அறிவுப் பூர்வமான குறியை அவரது ஊழியக்காரர்களுக்கு தேவன் தருவார் என்பது இந்த காலத்திற்குரிய தகவலாக இருக்கிறது. அங்கே முத்திரையிடும் ஒரு பெரும் வேலையிருக்கும். தேவனுடன் மிகவும் இணக்கமாக இருப்பவர்கள் முத்திரையிடுகிற வேலையை செய்கிற ஊழியக்காரராக இருப்பார்கள். இந்த முத்திரை என்பது சத்தியம். "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்." (யோவான் 8:32) அதை பெறுகிறவர்களின் நெற்றிகளில் சத்தியம் முத்திரையிடும். மனுக்குலத்தின் மற்றவர்கள் முத்திரையிடப்படாதவர்களாக இது காண்பிக்கும்.

தெய்வீக திட்டத்தின் அறிவு எந்த அளவுக்கு ஆச்சரியமான வல்லமையுடையதாக இருந்திருக்கிறது என்பதை தேவனுடைய உண்மையான அர்ப்பணம் செய்த பிள்ளைகள் அனைவரும் காணக்கூடும். உலகம் பார்க்கிறதைக் காட்டிலும் எப்படி எல்லாம் வித்தியாசமாக தெரிகிறது! இதற்கு முன்பு அவர்கள் அறிந்து கொள்ள முடியாத அநேக காரியங்களை காணும்படி அவர்களது அறிவின் கண்கள் எவ்வாறு திறக்கப்பட்டிருக்கின்றன! பரிசுத்தவான்கள் முத்திரையிடுவது முடிந்தவுடனே, இந்த யுகம் முடிவுக்கு வந்தவுடனே, நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கிற அந்த நான்கு தூதர்களும் பூமியின் மேல் அடிக்கும்படி அந்த காற்றுகளை விட்டு விடுவார்கள். அதன் விளைவு என்னவாக இருக்கும்? நான்கு திசைகளிலிருந்து நான்கு காற்றுகள் சேர்ந்து வந்து சுழல் காற்றாக மாறும். அதுவே வேதாகமம் கூறுகிற மகா உபத்திரவத்தின் நாட்களாக இருக்கும்.

### சில பலமான அடையாளங்கள்

இந்த "வான மண்டல காற்றுகள்" அடையாளமான காற்றுகள்; சொல்லர்த்தமான காற்றுகள் அல்ல; பூமியை சேதப்படுத்துவது என்பது அடையாளமான பூமி, சொல்லர்த்தமான பூமி அல்ல; "சமுத்திரம்" என்பது அடையாளமான சமுத்திரம், சொல்லர்த்தமான சமுத்திரம் அல்ல என்பதை கவனிக்கும்படி நாம் கூறுகிறோம். நமது வேதாகம விளக்கவுரையில் **(Volumes)** இந்த அடையாளங்கள் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் காணப்படுகிறது என்பதை முன்னரே காண்பித்திருக்கிறோம். பூமி என்பது சமூக முறைமைகளை, அரசாங்கங்களை, கட்டுப்பாடுகள் முதலானவைகளை குறிக்கிறது. சமுத்திரம் என்பதை அமைதியற்ற மனுக்குலத்தை குறிக்கிறது. அது பூமியை சேதப்படுத்தும் என்பது அரசாங்கங்களை சேதப்படுத்தும் என்பதைக் குறிக்கிறது. "வான மண்டல காற்றுகள்" என்பது இந்த விஷயத்தில் "ஆகாயத்து அதிகாரங்கள்" என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

சாத்தான் "ஆகாயத்து அதிகார பிரபு" என்றும் பிசாசுகளின் பிரபு என்றும் வேதாகமம் கூறுகிறது. (எபேசியர் 2:2; மத்தேயு 9:34) ஆகையால் இந்த அடையாள பாஷையில் "ஆகாயத்து அதிகாரங்கள்" என்பது பிசாசுகளை குறிக்கிறது என்று நாம் புரிந்துகொள்ளுகிறோம். பரிசுத்தவான்களின் நெற்றிகளில் முத்திரை போடுமளவும் பிடித்து வைக்கப்பட்டிருக்கிற இந்த ஆகாயத்து அதிகாரங்கள் அந்த விழுந்துபோன தூதர்கள் ஆகும். இவைகளை கட்டுப்படுத்துகிற அதிகாரம் நீக்கப்படும் போது உலகம் முழுவதும் அதிகப்படியான தீமையின் ஆளுகை இருக்கும். இந்த தீய ஆவிகள் தங்கள் சக்தியில் அனைத்து தீமைகளையும் செய்வார்கள். இது விழுந்து போன அனைத்து தூதர்களுக்கும் பரீட்சையாக அமையும். கட்டுப்பாட்டை நீக்குவது அவர்கள் தேவனுடைய சித்தத்துக்கு எதிராக செல்வார்களா என்பதை காண்பதற்காக ஆகும். இப்படியாக எந்த வகையிலாவது தீமையுடன் அவர்களது ஐக்கியத்தை வெளிப்படுத்துகிற அனைவரும் இரண்டாம் மரணத்திற்கு உட்பட்டவர்கள் ஆவார்கள். தேவனிடத்தில் விசுவாசத்தைக் காண்பிக்கிற மற்றவர்கள் நித்திய ஜீவனுக்கு பாத்திரவான்களாக குறிப்பிடப்படுவார்கள்.

இந்த தூதர்களுக்கான சோதனை பரிசுத்தவான்களோடு தொடர்புடையதாக இருக்கும். எனினும் இதை அறிவதற்கு நீண்ட வருடங்கள் நாம் காத்திருக்க வேண்டிய அவசியம் இராது.

R4881

# SET AS A WATCHMAN
# காவலனாக வைத்தேன்

"நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக." எசேக்கியேல் 3:17

எசேக்கியேல் மாபெரும் தீர்க்கதரிசிகளில் ஒருவராக கருதப்படுகிறார். அவருடைய காட்சிகள் மிகவும் யதார்த்தமானவைகளாக இருந்து பலமாக விளக்கப்படுகின்றன. அவரது தீர்க்கதரிசனங்களில் கொஞ்ச பகுதி யூதா ராஜ்யத்தின் மேல் வந்த இறுதியான கடுமையான சோதனைகளும் அதனைத் தொடர்ந்து சிதேக்கியாவின் ராஜ்யம் நீக்கப்படுவதற்கு முன்பு எழுதப்பட்டவை. மீதமுள்ள பகுதி ராஜ்யம் முற்றிலுமாக நீக்கப்பட்டதற்கு பிறகு எழுதப்பட்டது. முழு தீர்க்கதரிசனமும் எசேக்கியேலுக்கு பாபிலோனில் கொடுக்கப்பட்டது. எசேக்கியேல் அங்கேயே தங்கியிருந்து அடிமைப்பட்டவர்களுக்கு அவர்களது நிலைமையிலிருந்து அவர்களை எழும்பப் பண்ணி, தேவன் குறித்த காலத்தில் அவர்களை தங்கள் தேசத்திற்கு திரும்பி போகக்கூடிய நம்பிக்கையைக் குறித்து எடுத்துக்கூறுகிற ஊழியத்தை செய்தார்.

எனினும் எசேக்கியேலின் பணி முழுவதும் அவரது காலத்தில் வாழ்ந்த யூதர்களுக்கு மட்டுமே என்று யூகிப்பது தவறானதாக இருக்கும். அவரும் மற்ற பழைய ஏற்பாட்டு கால தீர்க்கதரிசிகளும் பேசி, எழுதிய காரியங்களை அவர்களும் அவர்களுடையவைகளை கேட்டவர்களும் புரிந்துகொள்ளவில்லை என்பதை பரிசுத்த பேதுருவின் அறிக்கை மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவைகளை பரிசுத்த ஆவி வழங்கப்படும் பெந்தெகொஸ்தே நாள் வரை புரிந்து கொள்ளக்கூடாது என்று தேவன் விரும்பினார். இந்த காரியங்கள் சுவிசேஷ யுகம் முழுவதும் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு "ஏற்ற கால போஜனமாக" இருக்கும்.

உதாரணத்திற்கு, "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்" என்று எசேக்கியேல் கூறும் போது, இந்த யுகத்தின் சுவிசேஷ சபைக்கு கொடுக்கப்பட்ட சத்தியமாக இருந்தது. அதோடு மேசியாவின் ஆட்சியில் முழு உலகத்திற்கும் பொருந்தக்கூடியதாக இருக்கும். ஆனால் அந்த தீர்க்கதரிசனம் சொல்லப்பட்ட காலத்தில் வாழ்ந்த யூதர்களுக்கு பொருந்தாது. ஏன்? அந்த சமயத்தில் உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் இருந்தது. பரிசுத்த பவுல் விளக்குவது போல, ஆதாமினுடைய கீழ்ப்படிதலினால் அவர்கள் அனைவரும் மரண தண்டனைக்கு கீழாக இருந்தார்கள். ஆதாமின் ஆக்கினையிலிருந்து முதலாவது அவர்கள் விடுவிக்கப்படும் வரை, அவர்கள் ஜீவனுக்கான சோதனையில் வைக்கப்பட முடியாது.

காளை மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தம் யூதர்களிடமிருந்து பாவத்தை நீக்காது, அவர்களை இரட்சிக்கவும் செய்யாது. இரட்சிப்பானது தேவன் நியமித்த வழியாகிய இரட்சகரின் மரணத்தின் மூலமாகவே வரவேண்டும். இரட்சகர் அந்த சமயத்தில் வந்திருக்கவில்லை; சுவிசேஷத்தின் மூலமாக நித்திய ஜீவனையும் அழியாமையையும் இன்னும் வெளியரங்கமாக்கவில்லை. இஸ்ரயேலரின் நியாயப்பிரமாணத்தை பொருத்தவரை, அது வருங்காலத்தின் புதிய உடன்படிக்கைக்கு வெறும் நிழலாக இருந்தது. மேலும் நியாயப்பிரமாணமானது யாரையும் பூரணப்படுத்தாது என்கிற அப்போஸ்தலரின் வார்த்தை நமக்கு இருக்கிறது.

பாவத்திலிருந்து எந்த அளவுக்கு திரும்பினாலும் யாருக்கும் நித்திய ஜீவனை கொடுக்காது. இரட்சகருக்கான அவசியம் இருப்பதால் பூரணராகும் அளவுக்கு யாரும் பாவத்திலிருந்து மனந்திரும்ப இயலாது. "பிதாக்கள் திராட்சைக் காய்களை தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின" என்னும் பழமொழியை எசேக்கியேல் குறிப்பிடும் போது, சகல மனிதரின் பாவமும் பலவீனமும் பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளுக்கு பரம்பரையாக வந்தது என்கிற உண்மையையும், அதிலிருந்து மீள்கிற காரியம் பாவ இனத்திலிருந்து வேறுபட்ட ஒரு இரட்சகர் இல்லாமல் நிறைவேறாது என்பதையும் குறிப்பிடுகிறார். பிதாவாகிய ஆதாமிடமிருந்து சுதந்தரித்துக் கொண்ட பலவீனத்திலிருந்து விடுதலை பெற யேகோவா தேவன், உலக இரட்சகரும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுமாகிய அவருடைய ஒரே பேறான குமாரன் மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறார்.

### "இளைப்பாறுதலின் காலங்கள்"

மகா இளைப்பாறுதல் நிச்சயம் வரும்; அது இஸ்ரயேலர்கள் மற்றும் ஜீவனுள்ளோர் தேசத்தை மாத்திரமல்ல சகல தேசத்தாரின் மரித்தோர்களையும் பாதிக்கும் என்கிற அறிக்கையானது எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தின் 16வது அதிகாரத்தில் தெளிவாக வைக்கப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசி, இஸ்ரயேலர்களை மீட்கிற தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிச்சயத்தை, முன்பிருந்ததைக் காட்டிலும் மேலான அவருடைய கிருபைக்குள் கொண்டு வருவார் என்று 40ஆம் வசனத்திலிருந்து விவரிக்கிறார். அதே சமயம் சமாரியர்கள் மறுசீரமைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும் சோதோமியர்களும் மறுசீரமைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும் தேவன் தீர்க்கதரிசி மூலம் அறிவிக்கிறார். இரட்சகர் அறிவிப்பது போல சோதோமியர்கள் வானத்திலிருந்து வந்த அக்கினியால் முற்றிலுமாக அழிக்கப்பட்டார்கள். மேலும் அவர்களது மறுசீரமைப்பு கல்லறையிலிருந்து, மரணத்திலிருந்து (ஹேடஸ், ஷியோல்) இருக்க வேண்டும்.

தேவன், இஸ்ரயேலர்கள் அல்லது மற்றவர்களின் எந்த தகுதியினாலும் இதைச் செய்யாமல், அவரது நாமத்தினிமித்தம் அவரது சொந்த சந்தோஷத்திற்காக இதைச் செய்கிறார் என்று தீர்க்கதரிசனம் மேலும் அறிவிக்கிறது. வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் அது உலக தோற்றத்திற்கு முன்னே தேவன் தமக்குள்ளே தீர்மானித்திருந்த தீர்மானம் ஆகும். இதற்காகவே பூமியிலே நீதியையும் நியாயத்தை ஸ்தாபிக்கவும் ஜனங்களை ஆசீர்வதிக்கவும் மேசியா ஏற்ற காலத்தில் "எண்ணற்ற பரிசுத்தவான்களோடு வருவார்" என்று அவர் ஏனோக்கிடம் அறிவித்தார். "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" எனக்கூறி ஆபிரகாமிடம் இதே செய்தியை அறிவித்தார். இதுதான் இஸ்ரயேலர்கள் மனதில் கொண்டிருந்த நம்பிக்கையாக இருந்தது. தேவன் அறிவித்தது நிறைவேறாமல் போகாது.

இந்த விளக்கங்கள் வசனம் 40 முதல் 60வரை காணப்படுகிறது. இவ்வாறாக இஸ்ரயேல் அவர்களது இளைப்பாறுதலில் தேவனுடைய நன்மையை அனுபவிக்கும் பொழுது, அவர்கள் வெட்கப்பட்டு, பெருமைக்காகவும் குறை கூறவும் வாயை திறக்கமாட்டார்கள். தேவனுடைய கிருபை திரும்ப அவர்களுக்கு கிடைத்த பிறகு இது இருக்கும். கடந்த காலத்தில் அவர்கள் செய்த உருவ வழிபாடுகளைக் குறித்து அவர் சமாதானம் அடைவார். இந்த சமாதானம் அடைதல் நமது கர்த்தரும் இரட்சகருமானவரால் நிறைவேறப்பட்ட இரட்சிப்பில் தெய்வீக நீதி சமாதானம் அடைந்தது.

பரி.பேதுரு மூலமாக குறிப்பிடப்படுகிற தீர்க்கதரிசிகளில் எசேக்கியேல் ஒருவர். அவர் வரப்போகிற இளைப்பாறுதலின் காலங்கள் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கிறார். அதாவது இந்த யுக முடிவில் ஆரம்பிக்கிற மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை குறித்தும் சபையானது ராஜரீக ஆசாரியத்துவத்துக்கு தெரிந்துகொள்ளப்பட்ட உடனே அவர்களுடைய தலையும் கர்த்தரும், மகா தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் மத்தியஸ்தருடன் மகிமையடைதல் குறித்தும் தீர்க்கதரிசனம் உரைக்கிறார். வரப்போகிற இந்த "இளைப்பாறுதலின் காலங்கள்" உலகத் தோற்றம் முதல் சகல தீர்க்கதரிசிகள் எல்லாராலும் உரைக்கப்பட்டிருக்கிறது என்று பரி. பேதுரு அறிவிக்கிறார். அவைகளைக் குறித்த எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் அவரை பரிசுத்த தீர்க்கதரிசிகளில் ஒருவராக்குகிறது. (அப்போஸ்தலர் 3:19-23)

இந்த நிலைப்பாட்டிலிருந்து நமது பாடத்தை பார்க்கும் போது, எசேக்கியேல், மனித குமாரனை, மகா போதகர் மற்றும் மீட்பரை அடையாளப்படுத்தினார். கிறிஸ்துவின் மணவாட்டியின் அங்கங்களையும் அடையாளப்படுத்தினார். அவர்களை மகிமையான தலையானவர் அவ்வப்போது, அவரது கருவிகளாக பயன்படுத்துகிறார்.

எசேக்கியேல் அதிசயத்தக்க விதமாக கேபார் நதியண்டையில் சிறைப்பட்டவர்கள் நடுவிலே கொண்டு செல்லப்பட்டார். சில காலத்திற்கு பிறகு அவர்களுக்காக ஒரு செய்தியை பெற்றார். தேவன் அவர்களுக்கு எச்சரிப்பை கொடுக்கும்படி அவரை காவலனாக வைத்ததாக அறிவித்தார். இந்த எச்சரிக்கை சுவிசேஷம் போதிக்கப்படும் காலத்திலிருந்து வெளியே சென்று கொண்டிருக்கிறது. பொல்லாதவன் அதாவது வேண்டுமென்றே, தெரிந்தே பொல்லாங்கு செய்கிறவனின் முடிவு மரணம் என்று அது சொல்லுகிறது. சுவிஷேச யுகத்தின் இந்த செய்தி முழு உலத்திற்குமானதல்ல, ஆனால் வேதவாக்கியங்கள் கூறுவது போல "கேட்கிறதற்கு காதுள்ளவர்களுக்கு மட்டுமே" ஆகும். "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்" என்று கூறி பரிசுத்த பவுல் இதை பயன்படுத்துகிறார். (ரோமர் 6:23)

## வேதனையல்ல மரணம்

பாவிகள் எந்த நிலையிலும் நித்திய ஆக்கினை அடைவார்கள் என்றோ அல்லது நித்திய துன்பத்தை அடைவார்கள் என்றோ தீர்க்கதரிசியோ அல்லது அவர் அடையாளப்படுத்துகிறவரோ சொல்லவில்லை என்பதை இங்கே கவனிப்பது நல்லது. "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்" என்பதே பாவங்களுக்கான உச்சக்கட்ட தண்டனை என்று தேவனுடைய வார்த்தையில் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், தேவன் பொல்லாங்கனுக்கு நித்திய ஜீவனை அளிக்க மாட்டார். ஆனால் பாவத்திலிருந்து திரும்புகிறவர்களுக்கு மட்டுமே அளிப்பார் என்று அவரது வார்த்தை அறிவிக்கிறது. நாம் வாசிக்கிறதாவது: "பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள், நீங்கள் ஏன் சாக வேண்டும்." மறுபடியும் நாம் வாசிப்பதாவது: "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன் மேல் நிற்கும்." கோபம் என்பது நித்திய மரண தண்டனையை குறிக்கும்.

தீர்க்கதரிசியும் அவரால் அடையாளப்படுத்தப் -படுகிறவர்களும் தேவனுடைய அர்ப்பணம் செய்த தற்கால ஜனங்களும் தெய்வீக திட்டத்தின் இந்த அம்சங்களை தெளிவுப்படுத்தும் வண்ணமாக, கடமைக்குட்பட்டு மனப்பூர்வமாக பாவம் செய்வது மரணத்தை கொண்டு வரும் என்று அறிவிக்கிறார்கள். பரிசுத்த பவுல், மனப்பூர்வமாய் பாவம் செய்கிற அனைவரும் நித்திய அழிவினால் தண்டிக்கப்படுவார்கள், நித்திய ஆக்கினையினால் அல்ல என்று அறிவிக்கிறார். (2 தெசலோனிக்கேயர் 1:9) சீயோனின் சுவற்றிற்குள் கிறிஸ்துவின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் காவலனாக இருக்கிறார்கள். எனினும் தீர்க்கதரிசியினால் அடையாளமாக சொல்லப்பட்டபடி தற்காலத்தில் சீயோன் பாபிலோனுக்குள் இருக்கிறது.

---


ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ.**C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :



சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.

கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com

Website : www.thestudiesinthescriptures. com



**FOR PRIVATE CIRCULATION ONLY**